# தேவ கிருபை என்றுமுள்ளது!

எத்தனை ஆண்டுகளை கடந்து வந்திருக்கின்றோம்! இன்னுமொரு புதிய ஆண்டிலே பிரவேசிக்கும் நாம்,தேவனாகிய கர்த்தருடைய கிருபையும், இரக்கத்தையும் குறித்து என்ன சொல்ல முடியும்? அவருடைய கிருபை என்றுமுள்ளது. அவருடைய இரக்கங்களுக்கு முடிவில்லை! எனவே, துதியோடும் புகழ்சியோடும் இந்த ஆண்டை நாம் நம் வாழ்விலே வர வேற்போமாக! கர்த்தரைத் துதி யுங்கள், அவர் நல்லவர் அவர் கிருபை என்றுமுள்ளது. இருப்ப தற்கு ஒரு வீடு உண்டு. பணத்தை சம்பாதிக்க ஒரு வேலையுண்டு. நல்ல குடும்பமும் உறவுகளும் நண்பர்களும் உண்டு. இந்த ஆண்டிற்குரிய நல்ல திட்டம் உண்டு. ஆத லால், நான் சுகமாய் திருப்பதியாய் சுகித்திருப்பேன் என்று அவற்றைக் குறித்து யார்தான் உறுதியாக கூற முடியும்? நாளைய தினத்தை குறி த்து எந்த மனுஷனால் பெருமை பாராட்ட முடியும்? எந்த மனுஷனாலும் அதை உறுதிப்படுத்த முடியாது. மனுஷனானவன், உயர்ந்தவானாகவோ தாழ்ந் தவனாகவோ இருந்தாலும் அவன் பெலன் மட்டுப்படுத்தப்பட் டதாகவே இருக்கின்றது. அவனுடைய ஆவி பிரியும், அவன் தன் மண் ணுக்குத் திரும்புவான் அந்நாளிலே அவன் யோசனைகள் அழிந்து போம். “மனுஷனை நம்புவதைப்பார்க்கிலும், கர்த்தர் பேரில் பற்றுதலா யிருப்பதே நலம். பிரபுக்களை நம்புவதைப்பார்க்கிலும், கர்த்தர்பேரில் பற்றுதலாயிருப்பதே நலம்.” “யாக்கோபின் தேவனைத் தன் துணை யாகக் கொண்டிருந்து, தன் தேவனாகிய கர்த்தர்மேல் நம்பிக்கையை வைக்கிறவன் பாக்கியவான்.” அவன் தன் வாழ்விலே நல்ல பங்காகிய தேவ வார்த்தைகளை தெரிந்து கொண்டு, அதை பற்றிக் கொண்டு வாழ் வதால், அவன் ஆபத்தை கண்டு அஞ்சமாட்டான். “அவர் வானத்தை யும் பூமியையும் சமுத்திரத்தையும் அவைகளிலுள்ள யாவையும் உண் டாக்கினவர் அவர் என்றென்றைக்கும் உண்மையைக் காக்கிறவர். அவர் ஒடுக்கப்பட்டவர்களுக்கு நியாயஞ்செய்கிறார் பசியாயிருக்கிறவர்களு க்கு ஆகாரங் கொடுக்கிறார் கட்டுண்டவர்களைக் கர்த்தர் விடுதலையா க்குகிறார். குருடரின் கண்களைக் கர்த்தர் திறக்கிறார் மடங்கடி க்கப்ப ட்டவர்களைக் கர்த்தர் தூக்கிவிடுகிறார் நீதிமான்களைக் கர்த்தர் சிநேகி க்கிறார். பரதேசிகளைக் கர்த்தர் காப்பாற்றுகிறார் அவர் திக்கற்ற பிள் ளையையும் விதவையையும் ஆதரிக்கிறார் துன்மார்க்கரின் வழியை யோ கவிழ்த்துப்போடுகிறார். கர்த்தர் சதாகாலங்களிலும் அரசாளு கிறார் சீயோனே, உன் தேவன் தலைமுறை தலைமுறையாகவும் ராஜ ரிகம்பண்ணுகிறார். அல்லேலூயா.”

**சங்கீதம் 118:29**

**கர்த்தரைத் துதியுங்கள், அவர் நல்லவர்; அவர் கிருபை என்றுமுள்ளது.**

**ஜெபம்:** என் பெலனும், என் கீதமும்; எனக்கு இரட்சிப்புமானா தேவனாகிய கர்த்தாவே, உம்முடைய கிருபைக்கும் இரக்கத்திற்கும் நன்றி. உம்மு டைய வார்த்தையிலே நிலைத்திருக்க எனக்கு கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# போதித்து நடத்துகின்ற தேவன்...

**சங்கீதம் 32:8**

**நான் உனக்குப் போதித்து, நீ நடக்கவேண்டிய வழியை உனக்குக் காட்டுவேன்; உன்மேல் என் கண்ணை வைத்து, உனக்கு ஆலோசனை சொல்லுவேன்.**

ஒரு ஊரிலே உண்மையும் உத்தமமுமாக வாழ்ந்து வந்த தகப்பனானவர், தன் பிள்ளைகளை அதிகமாக நேசித்து வந்தார். அவர்களுக்கு தயவோடு நல்ல அறிவுரைகளை கூறி, அவர்களை அன்போடு நடத்தி வந்தார். ஆண்டுகள் கடந்து சென்ற போது, அவனுடைய பிள்ளைகளில் ஒருவன், அவ்வப்போது அவருடைய ஆலோசனைகளை கேளாமல் தன் நண்பர்களின் வழியிலே நடக்க ஆரம்பித்தான். இதைக் கண்ட தகப்பனானவர், அந்த மகனானவனை குறித்து மிகவும் மன வேதனை அடைந்தார். அவன் மதிகேடான வழிகளிலே நடந்து அவன் வாழ்விலே நோவுகளை உண்டு பண்ணிவிடுவான் என்று அவனைக் குறித்து மிகவும் கரிசணையுடையவராக இருந்து வந்தார். அவனை தனியாக அழைத்து புத்திமதிகளை கூறினார். சில வேளைகளிலே, அவனுடைய தவறான வழிகளை கண்டு, அவனைக் கடிந்து கொண்டார். ஆனாலும், அவன் தன் தகப்பனானவருடைய போதகத்தை அசட்டை பண்ணினான். காரியங்கள் கட்டுப்பாட்டை மீறி செல்வதற்கு முன்னதாக, அவன் வாழ்க்கை நெறிப்படுத்தும்படி சில கடும் நடவடிக்கைகளை அவர் எடுக்க வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டார். அந்த அனுபவம் தற்போது, அந்த மகனானவனுக்கு கசப்பாக இருந்தது. ஆனாலும் அவன் வாழ்வு வளம் பெறுவதற்கு, அவனுக்கு கடிவாளம் போடப்பட வேண்டிய நிலைமை உண்டாயிற்று. தங்கள் பிள்ளைகளை கடிந்து கொண்டு, தண்டிப்பதில் எந்தப் பெற்றோரும் மகிழ்சியடைவதில்லை. ஆனால், நல் வாழ்விற்கு அதுதான் மருந்து என்ற நிலை ஏற்படும் போது, அவர்கள் அந்த மருந்தைக் கொடுக்கின்றார்கள். பிரியமான சகோதர சகோதரிகளே, நம்முடைய பரம பிதாவை விட நம்மை யார் அதிகமாக நேசிக்க முடியும்? "நான் உனக்குப் போதித்து, நீ நடக்கவேண்டிய வழியை உனக்குக் காட்டுவேன் உன்மேல் என் கண்ணை வைத்து, உனக்கு ஆலோசனை சொல்லுவேன்." என்று அவர் கூறியிருக்கின்றார். அவருடைய போதனையைக் கைக்கொண்டு அவர் காட்டும் வழியிலே நடப்பவனுக்கு வேதனை இல்லை. ஆனால், "வாரினாலும் கடிவாளத்தினாலும் வாய் கட்டப்பட்டாலொழிய, உன் கிட்டச் சேராத புத்தியில்லாக் குதிரையைப்போலவும் கோவேறு கழுதையைப்போலவும் இருக்க வேண்டாம்." என்று நமக்கு அறிவுரை கூறியிருக்கின்றார்.

**ஜெபம்:** காலங்களை அறிந்த தேவனே, என் எதிர்காலத்தை நீர் ஒருவரே அறிந்திருக்கின்றீர். உம்முடைய ஆலோசனைகளை நான் அசட்டை செய்யாமல், உம்முடைய வார்த்தையின் வழியிலே வாழ கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# கிருபை முற்றிலும் அற்றுப்போயிற்றோ?

“புதிய ஆண்டு, புதிய மாதம், புதிய நாள், ஆனால் பழைய வாழ்வைப் போலவே இருக்கின்றது என்று ஒரு விசுவாசியாவன் தன் இருதயத்திலே சொல்லிக் கொண்டான். ஒரு வருடம் நிறைவு பெறும் போதும், இன்னுமொரு புதிய வருடம் ஆரம்பிக்கும் போதும், விசுவாசிகள் நன்றி ஆரதனைகளைளும், உபவாச ஜெபங்களையும், ஆனந்த துதி முழங்கப்பண்ணும் பாடல்களையும் பாடி அந்த நாட்களை விசேஷிக்கின்றார்கள். ஆனால், சில நாட்கள் கடந்த பின்பு, அந்த பரபரப்புக்கள் யாவும் ஒய்ந்து போய்விடுகின்றது. சிலர் பெருமூச்சோடு வழமைக்கு திரும்புவோம் என்று தங்கள் நாளாந்த வேலைகளுக்கு சலிப்போடு திரும்புகின்றார்கள். இன்னும் சிலர், இரட்சிப்படைந்த பின்னரும், சில அடிமைத்தன கட்டுகளை விட்டுவிட முடியவில்லை, விடுதலையடைய வழியில்லை, மன உளைச்சல்களுக்கு முடிவில்லை என்று, தங்களுக்குள்ளே நொந்து கொண்டு வாழ்ந்து வாழுகின்றார்கள். இப்படியாக நமக்கு முன்சென்ற தேவ பக்தர்களும், தங்கள் இக்கட்டு நாட்களிலே, ஆண்டவர் நித்தியகாலமாய்த் தள்ளிவிடுவாரோ? இனி ஒருபோதும் தயைசெய்யாதிருப்பாரோ? அவருடைய கிருபை முற்றிலும் அற்றுப்போயிற்றோ? வாக்குத்தத்தமானது தலைமுறை தலைமுறைக்கும் ஒழிந்து போயிற்றோ? தேவன் இரக்கஞ்செய்ய மறந்தாரோ? கோபத்தினாலே தமது உருக்கமான இரக்கங்களை அடைத்துக்கொண்டாரோ? என்று எண்ணிக் கொண்ட சந்தர்பங்கள் உண்டாயிருந்தது. ஆனால், அந்த சிந்தனைகள் யாவும் தங்கள் பெலவீனம் என்று உணர்ந்து கொண்டார்கள். அதுபோலவே, இப்படியான சிந்தனைகள் உங்களுக்குள்ளும் தலைதூக்கும் போது அது உங்கள் மாம்ச பெலவீனம் என்பதை அறிந்து கொள்ளுங்கள். தேவனைவிட்டு தூரமாக போகும் எண்ணத்தை முற்றிலும் அகற்றிவிட்டு. அனுதினமும் வேதத்தை கருத்தோடு வாசியுங்கள். ஊக்கமாக ஜெபியுங்கள். தேவன் உங்கள் வாழ்க்கையில் செய்த அற்புத கிரியைகளை தியானம் செய்யுங்கள். உன்னதமானவருடைய வலதுகரத்திலுள்ள வருஷங்களை நினைவுகூருங்கள். கர்த்தருடைய செயல்களை நினைவுகூருருங்கள், அவருடைய பூர்வகாலத்து அதிசயங்களையே நினைவுகூருங்கள். அவருடைய கிரியைகளையெல்லாம் தியானித்து, அவர்களுடைய செயல்களை யோசியுங்கள். தேவனால் எல்லாம் கூடும் என்பதை அறிக்கை செய்து, அவருடைய பலத்த கிரியைகளை இந்த ஆண்டிலும் உங்கள் வாழ்விலே அனுபவியுங்கள்.

**சங்கீதம் 77:12**

உம்முடைய கிரியைகளையெல்லாம் தியானித்து, உம்முடைய செயல்களை யோசிப்பேன் என்றேன்.

**ஜெபம்**: என்னுடைய பெலவீன நேரங்களிலே எனக்கு உதவி செய்யும் தேவனே, என் மனச் சாமாதானத்தை குலைத்துப் போடும், பெவீனக்கட்டுகளை மேற்கொள்ள உம் கிருபையை தந்து என்னை நடத்திச் செல்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# நம்பிக்கையிலே உறுதியாயதிருங்கள்

“பிள்ளைகளே, நீங்கள் தேவனால் உண்டாயிருந்து, அவர்களை ஜெயித்தீர்கள் ஏனெனில் உலகத்திலிருக்கிறவனிலும் உங்களிலிருக்கிறவர் பெரியவர். அவர்கள் உலகத்துக்குரியவர்கள், ஆகையால் உலகத்து க் குரியவைகளைப் பேசுகிறார்கள், உலகமும் அவர்களுக்குச் செவிகொடுக்கும்.” என்று யோவான் எழுதின முதலாம் நிருபம் 4ம் 5ம் வசனங்களிலே வாசிக்கின்றோம். இது மாறாத சத்தியம்! நாம் பெற்றுக் கொண்ட பெரிதான பாக்கியம்! அதிலே எந்த மாறுதலோ, வேற்றுமையயோ இல்லை. எனினும், வேறு சில உண்மைகளையும் நாம் அறிந்து உணர்ந்து கொள்ள வேண்டும். நாம் இந்த புதிய ஆண்டிலும் இந்த உலகத்தில் தான் இருக்கின்றோம் என்பதை மறந்து போய்விடக்கூடாது. உலகமுழுவதும் பொல்லாங்கனுக்குள் கிடக்கிறதென்ற உண்மையை அறிந்து கொள்ள வேண்டும். எனவே, நாம் இந்த உலகதிலே இருக்கும்வரை உபத்திரவம் உண்டு. உங்கள் எதிராளியாகிய பிசாசானவன் கெர்ச்சிக்கிற சிங்கம்போல் எவனை விழுங்கலாமோ என்று வகைதேடிச் சுற்றித் திரிகிறான். (1 பேதுரு 5:8) ஆனாலும் திடன்கொள்ளுங்கள்! உலகத்தை ஜெயித்த ஆண்டவர் இயேசு உங்களோடுகூட இருக்கின்றார் என்ற விசுவாசத்தில் அசையாமல் உறுதியாயிருங்கள். எதிராளியானவனுக்கு எதிர்த்து நில்லுங்கள். நமக்கு முன்சென்ற நம்முடைய சகோதரரிடத்திலும் அப்படிப்பட்ட பாடுகள் நிறைவேறியிருக்கின்றது என்பதை வேதத்திலே காண்கின்றோம். அது மட்டுமல்ல, நம் வாழ் நாட்களிலும் கண்டு சாட்சி பகிர்ந்திருக்கின்றோம். எனவே, வெள்ளம் போல சாத்தான் வரும் போது பயந்து, கலங்கி, திகில் கொள்ளாதிருங்கள். அத்தகைய வேளையிலே ஒரு சத்தியத்தை அறிந்து கொள்ளுங்கள். உங்களுக்குள்ளே வாசம் செய்யும் ஆவியானவர், வெற்றிகொடி ஏற்றப் போகின்றார் என்பதை நினைத்து நன்றி கூறுங்கள். உலகத்தின் போக்கிற்கு சற்றும் இடம் கொடாதிருங்கள். ஆதியிலே கொண்ட விசுவாசத்தின் வைராக்கியத்தை உங்களுக்கு பின்வரும் சந்ததியின் நவீன கொள்கைகளால் மாற்றிப் போடாமல், அவர்களும் தேவனை அறிய வேண்டிய பிரகாரமாக அறிய வேண்டும் என்று அவர்களுக்காகவும் வேண்டிக் கொள்ளுங்கள். கிறிஸ்துவானவர் மகிமையின் நம்பிக்கை யாக உங்களுக்குள் இருப்பதை மறந்து போய்விடாதிருங்கள்.

**எபிரெயர் 10:23**

**அல்லாமலும், நம்முடைய நம்பிக்கையை அறிக்கையிடுகிறதில் அசைவில்லாமல் உறுதியாயிருக்கக்கடவோம்; வாக்குத்தத்தம்பண்ணினவர் உண்மையுள்ளவராயிருக்கிறாரே.**

**ஜெபம்**: எனக்காக யாவும் செய்து முடிக்கின்ற சர்வ வல்லமையுள்ள தேவனே, வாழ்க்கையிலே எந்தப் புயல் வந்து மோதினாலும் நான் அசையாமல் உறுதியாக உம்மைப் பற்றிக் கொண்டிருக்க எனக்கு கிருபை செய்வீராக. இரட்சகர்இயேசுவழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# நாம் வேதத்தை ஏன் கற்றுக் கொள்கின்றோம்?

அப்போஸ்தலராகிய பவுல் பிலிப்பி பட்டணத்திலுள்ள விசுவாசிகக ளுக்கு நிருபத்தை எழுதும் போது: "இயேசுகிறிஸ்துவின் ஊழியக்கார ராகிய பவுலும் தீமோத்தேயும், பிலிப்பி பட்டணத்தில் கிறிஸ்து இயேசுவு க்குள்ளான பரிசுத்தவான்கள் அனைவருக்கும், கண்காணிகளுக்கும், உதவிக்காரருக்கும்" எழுதியிரு க்கிறார். பரிசுத்த வேதாகமத்தை நீங்கள்வாசிக்கும் போதும், உங் கள் சபையிலே பிரசங்கிக்கப் படும் பிரசங்கங்களை அல்லது வேதப்படிப்புக்களை கேட்கும் போது, உங்கள் மனதிலே எழும் எண் ணங்கள் என்ன? சற்று தரித்திருந்து இதை சிந்தித்துப் பார்ப்பது உங்க ளுக்குபிரயோஜனமாக இருக்கும். வேதத்தை கற்றுக் கொள்ளும் போது, விசுவாசிகளுடைய மனதிலே தோன்றக்கூடிய சில எண்ணங்கள்: இதை நான் மற்றவர்களுக்கு பிரசங்கிப்பதெப்படி? இந்த வசனம் அந்த சகோ தரனுக்கு அல்லது இந்த சகோதரிக்கு பதிலடி கொடுப்பதற்கு ஏற்றது. நான் இன்னும் எவ்வளவாய் தேவனுக்கு நன்றி சொல்ல வேண்டும் என்ற உணர்வு ஏற்படுதல். நித்திய ஜீவன் தரும் இந்த அருமையான வார்த்தைகளுக்காக நான் இன்னும் அதிகமாக தேவனுக்கு நன்றி செலுத்த வேண்டும். இப்படியாக பற்பல சிந்தனைகள் மனதிலே தோன் றலாம். வேதவாக்கியங்களெல்லாம் தேவ ஆவியினால் அருளப்பட்டி ருக்கிறது. தேவனுடைய மனுஷன் தேறினவனாகவும், எந்த நற்கிரியை யுஞ் செய்யத் தகுதியுள்ளவனாகவும் இருக்கும்படியாக, அவைகள் உபதேசத்துக்கும், கடிந்து கொள்ளுதலுக்கும் சீர்திருத்தலுக்கும், நீதி யைப் படிப்பிக்குதலுக்கும் பிரயோஜனமுள்ளவைகளாயிருக்கிறது என்று 2 தீமோத்தேயு 3த் அதிகாரம் 16ம் 17ம் வசனங்களிலே வாசிக்கின் றோம். ஒரு விசுவாசியானவன் வேதத்தை வாசிக்கும் போது, முதலாவ தாக, நான் அந்த தேவ மனுஷனாக தேறினவனாகவும், நற்கிரியைகளை செய்ய தகுதியுள்ள வனாகவும் மாற வேண்டும் என்கின்ற சிந்தை ஒவ் வொரு விவாசியிலும் இருக்க வேண்டும். வேத வார்த்தைகளை பிரசங் கிக்கின்றவர்களும், சபையின் மேய்ப்பர்கள், போதர்கள், மூப்பர்களும், உதவி ஊழியங்களை செய்கின்றவர்களும், இன்னும் தங்களை அப் போஸ்தலர், தீர்க்கதரிகள், சுவிசேஷகர்கள் என்று கருதிக் கொள்கின் றவர்கள் யாவரும் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் விசுவாசிகள் என்பதை மறந்து போய்விடக்கூடாது. நாம் கிருபையினாலே விசுவா சத்தை கொண்டு இரட்சிக்கப்பட்ட, விசுவாசிகளும், வேறு பிரிக்கப்பட் டவர்களும், அவருடைய தூய இரத்தத்தினாலே பரிசுத்தவான்கள் என்றும் அழைக்கப்படுகின்றோம்.

**2 தீமோத்தேயு 3:14**

**நீ கற்று நிச்சயித்துக்கொண்டவைகளில் நிலைத்திரு;**

**ஜெபம்**: நித்திய ஜீவனுக்கென்று என்னை அழைத்த தேவனே, உம்முடைய வார்த்தைகளை தியானிக்கும் போது, நீர் என்னை அழைத்த நோக்கத்தை மறந்து போய்விடாதபடிக்கு எனக்கு உணர்வுள்ள இருதயத்தை தந்தருள் வீராக. இரட்சகர் இயேசு வழி யாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# 'இயேசுகிறிஸ்துவின் ஊழியக்காரன்'

ஆண்டவர் இயேசுவின் சீஷனாகிய பவுல், பொதுவாக நிருபங்களின் முகவுரையிலே, தேவனுடைய சித்தத்தினாலே, இயேசு கிறிஸ்துவின் ஊழியக்காரனும், அப்போஸ்தலனாகும்படி அழைக்கப்பட்டவன் என் பதை குறிப்பிடுவதை நாம் காண்கின்றோம். அதன் கருப்பொருள் என்ன? அவர் பெற்றுக் கொண்ட அழைப்பு மனுஷராலுமல்ல, மனுஷன் மூலமாயுமல்ல, இயேசுகிறிஸ் துவினாலும், அவரை மரித்தோ ரிலிருந்தெழுப்பின பிதாவாகிய தேவனாலும், உண்டாயிருந் தது. இந்த அழைப்பானது தேவ னுடைய நிர்பந்ததினால் உண் டானது அல்ல. மாறாக, மத வைராக்கியத்தினால் அடிமை யாக்கப்பட்டிருந்த பவுல், ஆண்டவராகிய இயேசுவின் சீஷரைப் பயமு றுத்திக் கொலைசெய்யும்படி சீறிப் அக்காலத்திலிருந்த மதத் தலை களின் அனுமதியோடு, விசுவாசமார்க்கத்தாரை சிறைப்பிடிக்கும்படி, தமஸ்கு பட்டயத்திற்கு செல்லும் வழியிலே, ஆண்டவர் இயேசுவே தேவ குமாரனாகிய வாக்களிக்கப்பட்ட மீட்பர் என்பதை அவன் அறிந்து கொண்ட நாழிகையிலே, "ஆண்டவரே, நான் என்ன செய்யச் சித்தமாயி ருக்கிறீர் என்று தன்னை கிறிஸ்து இயேசுவுக்கு என்றென்றையும் அடி மையாக இருக்கும்படி மனப்பூர்வமாக தன்னை ஒப்புக் கொடுத்தான். ஆதலால் எந்த தயக்கமும் இன்றி "இயேசுகிறிஸ்துவின் ஊழியக்காரன்" என்று தன்னை பிலிப்பி பட்டணத்திலுள்ள விசுவாசிகளுக்கு அறிமுகப்படுத்துகின்றார். இந்த நிரூபத்தை இந்த வருடத்திலே நாம் தொடர்ந்து தியானிக்கும் போது, நம்முடைய வாழ்விலும், குருட்டா ட்டமுள்ள மதவைராக்கியமும், கருத்தற்ற பிடிவாதங்களும், எப்படியாக தேவ வைராக்கியமாக மாற முடியும் என்பதை, ஆண்டவர் இயேசுவின் ஊழியராகிய பவுலின் வாழ்க்கையிலிருந்து நாம் கற்றுக் கொள்ளலாம். நம்முடைய அழைப்பும், மனுஷராலுமல்ல, மனுஷன் மூலமாயுமல்ல, பிதாவாகிய தேவனின் அநாதி தீர்மானத்தின்படி ஆண்டவர் இயேசு வழியாக உண்டாயிருக்கின்றது. எனவே நான் ஆண்டவர் இயேசுவின் ஊழியக்காரன் என்று தயங்காமல் அறிக்கை செய்வதற்கு நான் வெட் கப்படுகின்றேனா? என்னுடைய அழைப்பு தேவனால் உண்டாயிருந்தால் இன்று நான் யாரை பிரியப்படுத்தப் பார்கின்றேன்? என் சுயத்தையா? மற்றய மனுஷரையா? அல்லது நான் நித்திய ஜீவன் அடைய வேண்டும் என்று விலை மதிக்க முடியாத தன்னுடைய தூய இரத்தத்தினால என்னை கிரயத்திற்கு கொண்டு ஆண்டவர் இயேசுவையா?

**எரேமியா 31:3**

**ஆம் அநாதி சிநேகத்தால் உன் னைச் சிநேகித்தேன்; ஆத லால் காருணியத்தால் உன்னை இழு த்துக்கொள்ளுகிறேன்.**

**ஜெபம்:** நித்திய பிதாவாகிய தேவனே, கிறிஸ்துவின் சுவிசேஷத்தை க்குறித்து நான் வெட்கப்படேன்; என்னும் வார்த்தை என் சொல்லிலும் செயலிலும் என் வாழ்வில் நிலைவரப்பட்டிருக்க எனக்கு கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# கிறிஸ்து இயேசுவுக்குள்ளான பரிசுத்தவான்கள்

பிலிப்பி சபையோர் மத்தியிலே சமுதாய ஏற்றத் தாழ்வுகள், முறுமுறுப்புக்கள், பிரிவினைகள், மாம்சத்தின் பெருமைகள் போன்ற குறைவுகள் இருந்தை நாம் பின்வரும் அதிகாரங்களிலே வாசிக்கலாம். அந்த குறைவுகள் அவர்கள் மத்தியிலே இருப்பதை, சிறையிலிருந்த புவல், அவர்களை “கிறிஸ்து இயேசுவுக்குள்ளான பரிசுத்தவான்கள்” என்று தன்னுடைய நிருபத்திலே குறிப்பிட்டிருக்கின்றார். இது அவர் களுடைய கிரியைகளினாலே உண்டானதோ அல்லது தேவ கிருபையினாலே உண்டானதோ? ஆம்! தேவ கிருபையினாலே ஆண்டவர் இயேசுவின் மேல் கொண்ட விசுவாசத்தினாலே அது உண்டானது. நாம் கிறிஸ்து இயேசுவுக்குள்ளான பரிசுத்தவான்கள் என்று அழைக்கப்படுவதால், நாம் பாவ செய்யாத முற்றிலும் பரிசுத்தர் என்பது பொருளல்ல. நாம் ஆண்டவராகிய இயேவின் திருஇரத்தத்தினாலே கிரயத்திற்கு கொள்ளப்பட்டவர்கள். உலகத்தின் போக்கிலிருந்து வேறு பிரிக்கப்பட்டவர்கள் என்பதை அவர்களுக்கு ஞாபகப்படுத்துகின்றார். அதனால் என்ன? நாம் “கிறிஸ்து இயேசுவுக்குள்ளான பரிசுத்தவான்கள்” என்று அழைக்கப்படுவதினால், இரட்சிப்பு நிறைவேறிற்றோ? அப்படி இரட்சிப்பானது பூரணப்பட்டிருந்தால், அப்போஸ்தலவராகிய பவுல், பிலிப்பி பட்டணத்திலுள்ளவர்களுக்கு, அவர்களுடைய குறைகளை சுட்டிக் காட்டி இந்த நிருபத்தை எழுத வேண்டும்? பரிசுத்தவான்கள் என்று அழைக்கப்படுகின்றவர்கள், பரிசுத்தவான்களுக்கு ஏற்றபடி அசுத்தமானவைகளை தங்கள் வாழ்விலிருந்து களைந்து போட வேண்டும். “மேலும், பரிசுத்தவான்களுக்கு ஏற்றபடி, வேசித்தனமும், மற்றெந்த அசுத்தமும், பொருளாசையும் ஆகிய இவைகளின் பேர்முதலாய் உங்களுக்குள்ளே சொல்லப்படவுங்கூடாது. அப்படியே வம்பும், புத்தியீனமான பேச்சும், பரியாசமும் தகாதவைகள் ஸ்தோத்திரஞ்செய்தலே தகும். விபசாரக்காரனாவது, அசுத்தனாவது, விக்கிரகாராதனைக்காரனாகிய பொருளாசைக்காரனா வது தேவனுடைய ராஜ்யமாகிய கிறிஸ்துவின் ராஜ்யத்திலே சுதந்தரம டைவதில்லையென்று அறிந்திருக்கிறீர்களே. இப்படிப்பட்டவைகளினிமி த்தமாகக் கீழ்ப்படியாமையின் பிள்ளைகள்மேல் தேவகோபாக்கினைவ ருவதால், ஒருவனும் உங்களை வீண்வார்த்தைகளினாலே மோசம்போக்காதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள். அவர்களுக்குப் பங்காளிகளாகா திருங்கள் என்று வேதத்திலே வாசிக்கின்றோம். எனவே, “கனியற்ற அந்தகாரக்கிரியைகளுக்கு உடன்படாமல், அவைகளைக் கடிந்துகொள்ளுங்கள்.”

**எபேசியர் 5:10**

**கர்த்தருக்குப் பிரியமானது இன்னதென்று நீங்கள் சோதித்துப்பாருங்கள்.**

**ஜெபம்:** பரிசுத்த வாழ்வு வாழும்படிக்கு என்னை வேறு பிரித்த தேவனே, பரிசுத்தமாகுதலை தேவ பயத்தோடு நான் காத்துக் கொள்ளும்படிக்கு உம்முடைய கிருபையினாலே என்னை பெலப்படுத்தி நடத்திச் செல்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# இலவசமாக பெற்ற கிருபை

சீரும் செழிப்புமுடைய தேசமொன்றின் குடியுரிமையை பெற்றுக் கொள்வதற்கு அநேக தகைமைகள் வேண்டியதாயிருந்தது. அத்தோடு கூட, அந்த உரிமையை பெற்றுக் கொள்ள விரும்புவர்கள், அதிகபடியான பணத்தை கொடுக்க வேண்டியதாயிருந்து. அத்தகைய தேசத்தின் அயலிலுள்ள நாடொன்றிலே, அநேக ஆண்டுகளாக நடந்து வந்த யுத்தம் காரணமாக சமூதாக சீர்குலைவு உண்டாயிருந்தது. பொருளாதார நெருக்கடிகள் காரணமாக அநேகர் தங்கள் வேலையை இழந்து வறுமைக் கோட்டிற்குள் வாழ்ந்துவந்தார்கள். அவர்களில் சிலர், தங்கள்நாட்டிடை விட்டோடி, சீரும் செழிபுமுள்ள தேசத் தில் சென்று தஞ்சம் புகுந்து கொண்டார்கள். அந்த தேசத்தின் குடியுரிமையை பெற்றுக் கொள்வதற்கு, அவர்களுக்கு எந்த தகைமைகளோ, பணமோ அவர்களிடம் இல்லை. அப்படியான சூழ்நிலையிலே, அந்த தேசத்தின் ராஜாவானவன் மனம் இரங்கி, அவர்கள் யாவருக்கும், குடியுரிமையயை இலவசமாக கொடுத்தார். அவர்களும், தங்கள் குடிமக்களைப் போலவே சீரும் சிறப்புமாக வாழ்வார்கள் என்பதே அந்த ராஜாவின் எதிர்பார்ப்பாக இருந்தது. அதற்கு வேண்டி சகல வசதிகளும் அவர்களுக்கு இலவசமாகவே கொடுக்கப்பட்டது. அப்படியிருந்தும், அவர்களில் சிலர், தாங்கள் விட்டுவிட்ட நாட்டின் சீரற்ற் பழைய வாழ்க்கை முறைமைகள் விட்டுவிட மனதில்லாதவர்களாக இருந்தார்கள். பிரயாசப்பட்டு உழைக்க மனதில்லாதவர்களாக, களவு செய்ய ஆரம்பித்தார்கள். இப்படியாக தங்கள் சீர்கெட்ட வழிகளை விட்டு திரும்ப மனதில்லாத மனிதர்களை பார்த்து, நீங்கள் இந்த தேசத்தின் குடியுரிமையை உடையவர்கள் எனவே நீங்கள் நினைத்தபடி வாழ்ந்து கொள்ளுங்கள் என்று அந்த தேசத்தின் ராஜா அவர்களை அப்படியே விட்டுவிடுவாரோ? இலசசமாக கிருபையினாலே, பரிசுத்தவான்கள் என்ற தகுதியை பெற்ற சகோதர சகோதரிகளே, நீங்கள் பெற்ற அழைப்பை குறித்து சற்று சிந்தித்துப் பாருங்கள். சகலவித அநியாயத்தையும் நடத்திச் கொண்டு, உலகத்தரைப் போல மாம்ச இச்சைகளை நிறைவேற்றிக் கொண்டு, தேவ கிருபை என்றுமுள்ளது என்று சொல்லிக் கொள்ள கூடுமோ? பாவத்துக்கு மரித்த நாம் இனி அதிலே எப்படிப் பிழைப்போம்? நம்முடைய பெலத்திற்கு அப்பாற்பட்ட காரியங்களை செய்து முடிக்க தேவன் தரும் கிருபையை விருதாவாக்காதபடி எச்சரிக்கயுள்ளவர்களாக இருப்பபோமாக.

**ரோமர் 6:1**

**ஆகையால் என்ன சொல்லுவோம்? கிருபை பெருகும்படிக்குப் பாவத்திலே நிலைநிற்கலாம் என்று சொல்லுவோமா? கூடாதே.**

**ஜெபம்:** புதுக் கிருபையை தினமும் தரும் தேவனே, நான் இனிப் பாவத்துக்கு ஊழியஞ்செய்யாதபடிக்கு, ஆண்டவராகிய இயேசுவுக்கு அடிமையாக இருப்பதன் மேன்மைனயை உணரச் செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

**வெள்ளி | தை 9** 📖 மாலை வாசகம் – மத்தேயு 23:3

# கைக்கொண்டு போதிக்கிறவன்

குடும்பத்திலே பெற்றோர் பிள்ளைகளுக்கு புத்தி சொல்கின்றார்கள். பாடசாலையிலே ஆசிரியர்கள் மாணவர்களுக்கு கற்றுக் கொடுக்கின்றார்கள். வேலையிலே மேற்பார்வையாளர்கள் தொழிலாளிகளுக்கு சொல்லிக் கொடுகின்றார்கள். சபையிலே மேய்பர்கள் மூப்பர்கள் உபதேசிக்கின்றார்கள். பிள்ளைகளுக்கு கூறும் புத்திமதிகள் தங்கள் வாழ்வில் கைகொள்ளாத பெற்றோர்களை கூறித்து என்ன சொல்வீர்கள்?

> **மத்தேயு 5:19**
>
> **இவைகளைக் கைக்கொண்டு போதிக்கிறவனோ, பரலோக ராஜ்யத்தில் பெரியவன் என்னப்படுவான்.**

அவ்வண்ணமாகவே, பாடங்களை கற்றுக் கொடுக்கும் ஆசிரியர் அந்த பாடங்களுக்கு தான் விதிவிலக்கானவர் என்று சொல்ல முடியுமோ? வேலையைகற்றுக் கொள்ள மனதற்ற மேய்பார்வையாளர் எப்படி தனக்கு கீழ்பட்டவனுக்கு வேலையை சொல்லிக் கொடுக்க முடியும்? உபதேசத்தை விரும்பாத மேய்பர்கள் மூப்பர்கள் எப்படி தாழ்மையையும் கீழ்படிவையும் குறித்து பேச முடியும்? பிரியமான சகோதர சகோதரிகளே, நாம் ஒவ்வொரும் ஏதோ ஒரு சூழ்நிலையிலே மற்றவர்களுக்கு உபதேசிக்கின்றவர்களாகவே இருக்கின்றோம். ஆனால், ஒருவன் அந்த உபதேசம் தனக்கு அல்ல ஊருக்கு மாத்திரமே என்று சொல்லிக் கொண்டால், அவன் மாயக்காரனாக இருந்து கொண்டு, மேலானவைகளை தேடுகின்றவனைப் போல தன்னை காண்பித்துக் கொள்வான். “வானமும் பூமியும் ஒழிந்துபோனாலும், நியாயப்பிரமாணத்திலுள்ளதெல்லாம் நிறைவேறுமளவும், அதில் ஒரு சிறு எழுத்தாகிலும், ஒரு எழுத்தின் உறுப்பாகிலும் ஒழிந்துபோகாது என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன். ஆகையால், இந்தக் கற்பனைகள் எல்லாவற்றிலும் சிறிதான தொன்றையாகிலும் மீறி, அவ்விதமாய் மனுஷருக்குப் போதிக்கிறவன் பரலோகராஜ்யத்தில் எல்லாரிலும் சிறியவன் என்னப்படுவான் இவைகளைக் கைக்கொண்டு போதிக்கிறவனோ, பரலோகராஜ்யத்தில் பெரியவன் என்னப்படுவான்.” என்று ஆண்டவர் இயேசு கூறியிருக்கின்றார். எனவே, பிலிப்பியருக்கு அறிவுரைகளை எழுதும் போது, தேவ ஊழியராகிய பவுல், பிலிப்பி பட்டணத்தில் கிறிஸ்து இயேசுவுக்குள்ளான பரிசுத்தவான்கள் அனைவரோடும் கூட, அதிகாரத்திலுள்ளவர்களையும் குறிப்பிட்டிருப்பதை நாம் காணக்கூடியதாக இருக்கின்றது. எனவே, நீங்கள் எந்த நிலையில் இருந்து உபதேசித்தாலும், நீங்கள் அதற்கு விதிவிலக்கானவர்கள் என்று எண்ணக் கூடாது. ஒருவன் தன்னை இயேசு கிறிஸ்துவின் ஊழியக்காரன் என்று கூறினால், அவன் தன் எஜமானானாகிய இயேசு கிறிஸ்துவைப் போலவே தாழ்மையும் கீழ்படிவுமுள்ளவனாக இருக்க வேண்டும்.

**ஜெபம்**: பரலோக தேவனே, வாழ்வு தரும் உம்முடைய வார்த்தைகளை நான் மனதார ஏற்றுக் கொண்டு, அவைகளை கைகொண்டு போதிக்கும் உள்ளத்தை எனக்கு தந்து என்னை வழிநடத்தி செல்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# தன்னை சீஷன் என்று சொல்லிக் கொள்பவன்

யார் ஆண்டவர் இயேசுவின் ஊழியக்காரன் என்று தன்னை கூறிக் கொள்ள முடியும்? யார் கிறிஸ்து இயேசுவுக்கு சீஷர்களாக இருக்க முடியும்? இன்று பலர் தங்களை ஆண்டவர் இயேசுவின் ஊழியக்காரர் என்றும் சீஷர்கள் என்றும் அழைத்துக் கொள்கின்றார்கள். நாமும், ஆண்டவர் இயேசுவின் சீஷர்கள் என்று நம்மை எண்ணிக் கொள்கின் றோம். இவைகளை குறித்து பரிசுத்த வேதாகமம் கூறவதை சற்று ஆராய்ந்து பார்ப்போம். "நீங்கள் என்னைப் போதகரென்றும், ஆண் டவரென்றும் சொல்லுகிறீர்கள். நீங் கள் சொல்லுகிறது சரியே, நான் அவர்தான். ஆண்டவரும் போதக ருமாகிய நானே உங்கள் கால்க ளைக் கழுவினதுண்டானால், நீங்க ளும் ஒருவருடைய கால்களை ஒருவர் கழுவக்கடவீர்கள். நான் உங்களு க்குச் செய்ததுபோல நீங் களும் செய்யும்படி உங்களுக்கு மாதிரியைக் காண்பித்தேன். மெய்யாகவே மெய்யாகவே நான் உங்களுக்குச் சொல் லுகிறேன், ஊழியக் காரன் தன் எஜமானிலும் பெரியவனல்ல, அனுப்ப ப்பட்டவன் தன்னை அனுப்பினவரிலும் பெரியவனல்ல. நீங்கள் இவை களை அறிந்திருக்கிறபடியினால், இவைகளைச் செய்வீர்களானால், பாக்கியவான்களாயிருப்பீர்கள்." "யாதொருவன் என்னிடத்தில் வந்து, தன் தகப்பனையும் தாயையும் மனைவியையும் பிள்ளைகளையும் சகோ தரனையும் சகோதரிகளையும், தன் ஜீவனையும் வெறுக்காவிட்டால் என க்குச் சீஷனாயிருக்கமாட்டான். தன் சிலுவையைச் சுமந்துகொண்டு என க்குப் பின்செல்லாதவன் எனக்குச் சீஷனாயிருக்கமாட்டான்." "நீங்கள் என்னிலும், என் வார்த்தைகள் உங்களிலும் நிலைத்திருந்தால், நீங்கள் கேட்டுக்கொள்வதெதுவோ அது உங்களுக்குச் செய்யப்படும். நீங்கள் மிகுந்த கனிகளைக் கொடுப்பதினால் என் பிதா மகிமைப்படுவார், என க்கும் சீஷராயிருப்பீர்கள்." "நீங்களும் உங்களுக்குக் கட்டளையிடப்பட்ட யாவற்றையும் செய்தபின்பு: நாங்கள் அப்பிரயோஜனமான ஊழிய க்காரர், செய்யவேண்டிய கடமையைமாத்திரம் செய்தோம் என்று சொல் லுங்கள்" என்று ஆண்டவராகிய இயேசு கூறியிருக்கின்றார். எனவே, மனத்தாழ்மையும், கீழ்படியும் இல்லாமல் ஒருவனும் ஆண்டவர் இயே சுவின் சீஷனாக இருக்க முடியாது என்பதை நாம் தெளிவாக அறிந்து கொள்ள வேண்டும். எனவே, கிறிஸ்து இயேசுவில் நிலைத்திருந்து கனி கொடுக்கும் வாழ்க்கையை தெரிந்து கொள்ள வேண்டும். கனிகள் வாழ்க்கையிலே வெளிப்பட வேண்டும்.

**மத்தேயு 28:19**

**ஆகையால், நீங்கள் புறப்பட் டுப்போய், சகல ஜாதிகளை யும் சீஷராக்கி,**

**ஜெபம்**: என்னை அழைத்த தேவனாகிய கர்த்தாவே, ஆண்டவர் இயேசு வைப் போல மனத்தாழ்மையோடும், சாந்தத்தோடும் இந்த உலகிலே வாழும்படிக்கு எனக்கு உம்முடைய கிருபையை தந்த என்னை வழிந டத்தி செல்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# கிருபையும் சமாதானமும்

பரிசுத்த வேதாகமத்திலே, புதிய ஏற்பாடிலே, எழுததப்பட்டிருக்கும் நிரூபங்களில், பதின்மூன்று நிரூபங்கள் தேவ ஊழியராகிய பவுல் எழுதியிருக்கின்றார் என்பது அவருடைய நிரூபங்கள் வாயிலாகவே உறுதி செய்யப்பட்டிருக்கின்றது. அந்தப் 13 நிரூபங்களை ஆரம்பிக்கும் போது, "நம்முடைய பிதாவாகிய தேவனாலும் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினாலும் உங்களுக்குக் கிருபையும் சமாதானமும் உண்டாவதாக." என்ற வாழ்த்துதல் எல்லா நிரூபங்களிலும் எழுத்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. கிரேக்கர்கள் கிருபையை கூறி வாழ்த்துதல் சொல்வார்கள் என்றும், யூதர்கள் சமாதானம் என்று கூறி வாழ்த்துதல் சொல்வார்கள் என்றும் சில ஆய்வாரள்கள் கூறிக் கொள்கின்றார்கள். இதற்கு வேதத்திலிருந்து எந்த ஆதாரமும் இல்லை. ஆனால், அப்போஸ்தலராகிய பவுல், தன்னுடைய நிரூபங்களில் விசுவாச மார்க்கத்தார் மத்தியிலே ஒருமைப்பாட்டிக்குறித்தும், சமாதானமான வாழ்வைக் குறித்தும் வலியுறுத்தி கூறியிருப்பதை பல இடங்களிலே காண்கின்றோம். "நீங்களெல்லாரும் கிறிஸ்து இயேசுவைப்பற்றும் விசுவாசத்தினால் தேவனுடைய புத்திரராயிருக்கிறீர்களே. ஏனெனில், உங்களில் கிறிஸ்துவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றவர்கள் எத்தனைபேரோ, அத்தனைபேரும் கிறிஸ்துவைத் தரித்துக்கொண்டீர்களே. யூதனென்றும் கிரேக்கனென்றுமில்லை, அடிமையென்றும் சுயாதீனனென்றுமில்லை, ஆணென்றும் பெண்ணென்றுமில்லை நீங்க ளெல்லாரும் கிறிஸ்து இயேசுவுக்குள் ஒன்றாயிருக்கிறீர்கள்" என்று கலாத்தியர் 3ம் அதிகாரத்திலே குறிப்பிட்டிருப்பதைக் காணலாம். மேலும் ஒரு விசுவாசிக்கு கிருபையும், இன்னுமொரு விசுவாசிக்கு சமாதானம் என்றும் தேவன் பிரித்து வைக்கின்றவர் அல்ல. தேவ கிருபையில்லாமல் எந்த ஒரு விசுவாசியும் சமாதானமான வாழ்வை வாழ முடியாது. அதனால்தான் அவர் தேவ கிருபையையும், தேவ சமாதான மும் உண்டாயிருப்பதாக என்று வாழத்துதல் கூறியிருக்கின்றார். அப் போஸ்தலராகிய பேதுருவும் தன்னுடைய இரண்டாம் நிரூபத்தை முடி க்கும் வேயையிலே, நம்முடைய கர்த்தரும் இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவின் கிருபையிலும் அவரை அறிகிற அறிவிலும் வளருங்கள் அறிவுரை கூறியிருக்கின்றார். எனவே, நாம் தேவகிருபையை குறித்து நன்றாக அறிந்து, அதிலே வளர வேண்டும். இந்த நாட்களிலே அதைக் குறித்து மனத்தாழ்மையோடும் பொறுமையோடும் தியானம் செய்யுங்கள்.

**பிலிப்பியர் 1:2**

நம்முடைய பிதாவாகிய தேவனாலும் **கர்த்தராகிய** இயேசுகிறிஸ்துவினாலும் உங்களுக்குக் கிருபையும் சமாதானமும் உண்டாவதாக.

**ஜெபம்:** கிருபையினாலே என்னை இரட்சித்த தேவனே, உம்முடைய கிருபையின் மேன்மையை குறித்து நான் நாளுக்கு நாள் அறிவடையும் படிக்கு உணர்வுள்ள இருதயத்தைத் தந்து என்னை வழிநடத்திச் செல்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# பெலவீன நேரங்களிலே...கிருபை

நம்முடைய கர்த்தரும் இரட்சகருமாகிய இயேசுகிறிஸ்துவின் கிருபையில் ஒவ்வொரு விசுவாசியும் வளர்ந்து பெருக வேண்டும். “நாம் நிர்மூலமாகாதிருக்கிறது கர்த்தருடைய கிருபையே”. சில விசுவாசிகள் தாங்கள்மற்றய விசுவாசிகளுக்கு எதிராககுற்றங் குறைகளைசெய்யும் போது, தங்களுக்குதேவ கிருபை வேண்டும். ஆனால், மற்றய விசுவாசிகள் தங்களுக்கு எதிராக குற்றம் செய்யும் போது அவர்களுக்கு படிப்பினையும், தண்டனையும் தேவை என்ற பிரகாரமாக வாழ்ந்து வருகின்றார்கள். இப்படிப்பட்டவர்கள் தேவ கிருபையை அறிய வேண்டிய பிரகாரமாக இன்னும் அறியவில்லை. நம்முடைய பெலவீன நேரங்களிலே தேவ கிருபையானது நம்மை தாங்கி வழிநடத்துகின்றது. நாம்பெலவீனங்களிலே நிற்கும்படியாக அல்ல, மாறாக எம்மால் செய்ய முடியாதவைகளை, நம்முடைய பெலத்திற்கு அப்பாட்பட்ட காரியங்களை செய்வதற்கு தேவ கிருபையானது நமக்கு அனுதினமும் அருளப்படுகின்றது. இன்று உங்களால் செய்ய முடியாமல் இருக்கும் காரியங்கள் என்ன? எவற்றை செய்து முடிக்க உங்களுக்கு தேவ கிருபை தேவை என்று விசுவாசிகளிடம் கேட்டால், பொதுவாக அவர்கள் கூறும் பதில்கள் என்ன? அற்புதங்கள், அடையாளங்கள் செய்ய முடியவில்லை, கல்வி கற்க முடியவில்லை, வேலையிலே சிறப்பாக காரியங்களை நடத்த முடியவில்லை என்று பற்பல காரியங்களை கூறிக் கொள்வார்கள். எத்தனை பேர், என்னால் என் உடன் சகோதரர்களை மன்னிக்க முடியவில்லை என்று கூறுகின்றார்கள்? எத்தனை பேர் என்னால் மனக்கசப்பு, பிரிவினைகள், முரட்டு வைராக்கியங்கள் போன்றவற்றை மேற்கொள்ள முடிவில்லை. அவை என் பெலத்திற்கு அப்பாற்பட்டது. எனவே, அவைகளை மேற்கொண்டு கிறிஸ்துவுக்குள் வெற்றி வாழ்க்கை வாழ எனக்கு தேவ கிருபை தேவை என்று கூறுகின்றார்கள். இப்படியப்பட்ட பெலவீனங்களை மேற்கொள்ளும்படியாக தேவ கிருபையானது நமக்கு அருளப்படுகின்றது. தேவ சித்தத்திற்கு ஒப்புக் கொடுக்கின்றவர்கள் அவைகளை மேற்கொண்டு சாட்சியாக வாழ்கின்றார்கள். தேவ சித்தத்திற்கு ஒப்புக் கொடுக்கின்றதென்பதன் பொருள் என்ன? ஒரு விசுவாசி தேவனுடைய சத்திய வார்த்தையின்படி தனக்கு ஆகட்டும் என்று தன்னை ஒப்புக் கொடுக்கும் போது, தேவ சித்த்திற்கு தன்னை ஒப்புக் கொடுக்கின்றாரன். தேவ வார்த்தையின்படி மன்னிக்க பழகிக் கொள்கின்றான். தேவ சமாதானத்துடன் வாழ பழகிக் கொள்கின்றான்.

**2 கொரிந்தியர் 12:9**

**என் கிருபை உனக்குப் போதும்; பலவீனத்திலே என் பலம் பூரணமாய் விளங்கும் என்றார்.**

**ஜெபம்**: அனுதினமும் புதுக் கிருபையை தந்து வழிநடத்தும் தேவனே, என்னால் செய்யமுடியாமல் இருக்கும் நிறைவான காரியங்களை செய்யும்படிக்கு செய்யும்படி என்னை நீர் உணர்த்தி வழிநடத்திச் செல்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# உன்னதமான அழைப்பைப் பெற்றவர்கள்

இன்றைய உலகிலே கலச்சாரம் என்ற போர்லையின் கீழ் பல பாகுபாடுகள் சில சபைகளுக்குள் நுழைந்திருப்பதை காணக்கூடியதாக இருக்கின்றது. விசுவாச மார்க்கத்தார் மத்தியிலே, தேசத்தின் அடிப்படையில், பட்டணங்களுக்கு பட்டணம் வேற்றுமைகளும், சமுகத்திற்கு சமுகம் வேறுபட்ட கொள்கைகளுமுடையவர்களாக காணப்படுகின்றார்கள். எடுத்துக்காட்டாக, வெவ்வேறு நாடுகளிலுள்ள, விசுவாசிகள் வெவ்வேறான உணவுகளை உண்கின்றார்கள். ஆனால், உணவு வகைகளின் பாகுபாடு இன்றி எந்த ஒருநபரும் போஜன பிரியனாக இருக்கக்கூடாது நாம் வெவ்வேறான பாஷைகளை பேசினாலும், வம்பும், புதியீனமான வார்த்தைகளும் எந்த விசுவாசிக்கும் ஏற்புடையதல்ல. அதுபோலவே, நாம் வெவ்வேறு வகையான உடுத்திக் கொள்ளலாம். ஆனால், விசுவாசிகள் எங்களிருதாலும் தங்கள் நடை உடை பாவனையிலே அடக முள்ளவர்களாக காணப்பட வேண்டும். பிரியமானவர்களே நீங்கள், "தன்னைச் சிருஷ்டித்தவருடைய சாயலுக்கொப்பாய்ப் பூரண அறிவடையும்படி புதிதாக்கப்பட்ட புதிய மனுஷனைத் தரித்துக்கொண்டிருக்கிறீர்களே. அதிலே கிரேக்கனென்றும் யூதனென்றுமில்லை, விருத்தசேதனமுள்ளவனென்றும் விருத்தசேதனமில்லாதவனென்றுமில்லை, புறஜாதியானென்றும் புறதேசத்தானென்றுமில்லை, அடிமையென்றும் சுயாதீனனென்றுமில்லை கிறிஸ்துவே எல்லாரிலும் எல்லாமுமாயிருக்கிறார். ஆகையால், நீங்கள் தேவனால் தெரிந்துகொள்ளப்பட்ட பரிசுத்தரும் பிரியருமாய், உருக்கமான இரக்கத்தையும், தயவையும், மனத்தாழ்மையையும், சாந்தத்தையும், நீடிய பொறுமையையும் தரித்துக்கொண்டு. ஒருவரையொருவர் தாங்கி, ஒருவர்பேரில் ஒருவருக்குக் குறைபாடு உண்டானால், கிறிஸ்து உங்களுக்கு மன்னித்ததுபோல, ஒருவருக்கொருவர் மன்னியுங்கள். இவை எல்லாவற்றின்மேலும், பூரணசற்குணத்தின் கட்டாகிய அன்பைத் தரித்துக்கொள்ளுங்கள். தேவசமாதானம் உங்கள் இருதயங்களில் ஆளக்கடவது, இதற்கென்றே நீங்கள் ஒரே சரீரமாக அழைக்கப்பட்டீர்கள் நன்றியறிதலுள்ளவர்களாயுமிருங்கள்." என்று கொலோசேயர் 3ம் அதிகாரத்திலே வாசிக்கின்றோம். எனவே இந்த பூமிக்குரிய கலாச்சாரங்களை உங்கள் வாழ்வில் மேன்மைப்படுத்தாமல், பரலோகத்திற்குரியவைகளை நாடித்து தேடுங்கள். அவைகளையே உங்கள் வாழ்வில் முதன்மைப் படுத்திக் கொள்ளுங்கள்.

**கொலோசெயர் 3:1**

**நீங்கள் கிறிஸ்துவுடன்கூட எழுந்ததுண்டானால், கிறிஸ்து தேவனுடைய வலதுபாரிசத்தில் வீற்றிருக்கும் இடத்திலுள்ள மேலானவைகளைத் தேடுங்கள்.**

**ஜெபம்**: பரலோக தேவனே, தேவசமாதானம் என் இருதயத்தில் ஆளும்படிக்கு உம்முடைய சத்திய வார்த்தைகளை பற்றிக் கொண்டு, அதன்படி வாழ எனக்கு உணர்வுள்ள இருதத்தை தந்து வழிநடத்திச் செல்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

புதன் | தை 14

📖 மாலை வாசகம் – எபிரெயர் 10:26

# சத்தியத்திற்கு கீழ்படியுங்கள்

இயேசுவானவர் ஞானத்திலும், வளர்த்தியிலும், தேவ கிருபையிலும், மனுஷர் தயவிலும் அதிகதிகமாக விருத்தியடைந்தார் என்று லூக்கா எழுதின சுவிசேஷத்திலே இரண்டாம் அதிகாரத்தின் முடிவிலே வாசிக் கின்றோம். நாம் யாவரும் தேவ கிருபையிலே வளர வேண்டும். தேவ கிருபை இன்தென்று அறிய வேண்டும். தேவ கிருபைக்கு நாம் பாத்திரர் அல்ல என்பதையும் உணர்ந்து கொள்ள வேண்டும். அதனால் என்ன, எல்லாம் தேவ கிருபை என்று சொல் லிவிட்டு, விசுவாசிகள் தங்கள் கண் போன போக்கிலே வாழ முடியுமா? பிலிப்பியருக்கு எழுத்தின நிருபத் திலே, அப்போஸ்தலராகிய பவுல், கிருபையும் சமாதானமும் உண்டா வதாக என்று வாழ்த்தி இருக்கின் றார். தேவ கிருபை இருந்தால் மாத் திரம் போதுமென்றால், ஏன் பிலிபி யருடையகுறைகளை குறித்து அவர் எழுதினார்? ஏனெனில் அவர்கள் சத் தியத்தைவிட்டு விலகிச் செல்வதற்கு ஏதுவான காரியங்கள் அவர்கள் மத்தியிலே காணப்பட்டது. தேவ கிருபையை அறிந்து கொள்கின்ற வர்கள், சத்திய வார்த்தைகளின்படி வாழ தங்களை ஒப்புவிப்பார்கள் என்பதைக் குறித்து கடந்த நாட்களிலே தியானம் செய்தோம். பிலிப்பி சபையோரிடத்திலே, பெருமை இருந்தது. அதைக் குறித்து பின்வரும் நாட்களிலே நாம் ஆராய்நது அறிந்து கொள்ளலாம். எனவே, தேவ ஊழி யராகிய பவுல் தாமே, கிறிஸ்துவின் சிந்தையை தரித்து கொள்ளும்படி அவர்களுக்கு அறிவுரை கூறியிருக்கின்றார். அதாவது, மனத்தாழ்மை யோடும், கீழ்படிவோடும் தேவ சித்தத்தை நிறைவேற்ற வேண்டும். அத ற்காகவே தேவன் தாமே அனுதினமும் நமக்கு புது கிருபையை தருகி ன்றார். நாம் செய்ய முடியாததை செய்து முடிக்கும்படிக்கு தேவ கிரு பையானது நம்மை பெலப்படுத்துகின்றது. மேற்கொள்ளமுடியாத பெல வீனங்களை மேற்கொள்ளும்படி நம்மை பெலப்படுத்துகின்றது. பிரிய மானவர்களே, இன்று சிலர் கிருபை, கிருபை என்று கூறிக் கொண்டு, தங்கள் சுய இஷ்டப்படி பாவத்திலே வாழ்ந்து வருகின்றார்கள். இவர் கள் சத்தியத்தை மறுதலிக்கின்றர்கள். சத்தியத்தை அறிய மனதில்லாத வர்கள். தங்களுக்குள் இருக்கும் சத்திய ஆவியாவனர், தங்களை சகல சத்தியத்திலும் வழிடத்த இடங் கொடுக்காதவர்கள். நீங்கள் அவ்வ ணமாக வாழாமல், உங்கள் சுத்த மனசாட்சி சூடுண்டு போகாமல், உணர் வுள்ள இருயத்தைதோடு சத்தியத்திற்கு கீழ்படியுங்கள்.

**ரோமர் 6:22**

இப்பொழுது நீங்கள் பாவத்தினின்று விடுதலையாக்கப்பட்டு, தேவனுக்கு அடிமைகளானதினால், பரிசுத்தமாகுதல் உங்களுக்குக் கிடைக்கும் பலன், முடிவோ நித்தியஜீவன்

**ஜெபம்:** தாழ்மையுள்ளவர்களுக்கு கிபையை அளிக்கின்ற தேவனே, நீர் தந்திருக்கும் கிருபையின் நாட்களை நான் வீணாக்காதபடிக்கு, சத்தியத் திலே நடக்க எனக்கு உணர்வுள்ள இருதயத்தை தந்து வழிநடத்தி செல் வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# வழிநடத்தும் சத்திய ஆவியானவர்!

ஆண்டவராகிய இயேசுவின் தாயாகிய மரியாள், கன்னிகையாக இருந்த போது, தனக்கு இன்னபிரகாரமாக காரியங்கள் நடக்கப்போகின்றது என்ற அறியாதிருந்தாள். அன்றிருந்த யூத கலாச்சாரமானது கடும் போக்கையுடையதாக இருந்ததாகவும், அக்காலத்தின் மதத் தலைவர்கள் கடும் தண்டனைகளை வழங்குகின்றவர்களாக இருந்தார்கள் என்றும், வேதத்தின் வாயிலாக நாம் அறிகின்றோம். காபிரியேல் என்னும் தூதன், மரியாள் இருந்த வீட்டில் பிரவேசித்து: கிருபை பெற்றவளே, வாழ்க, என்று வாழ்த்தினார். அன்றைய கலாச்சாரத்தின்படி செய்ய முடியாததை, ஒரு கன்னிகையால் நிறைவேற்றக் கடினமாக காரியத்தை, செம்மையாய் செய்து முடிக்கும்படியாக தேவ கிருபையானது கன்னியையாக இருந்த மரியாளுக்கு வெளிப்பட்டது. தேவ கிருபையைப் பெற்றவர்கள், தங்கள் வாழ்வை தேவ சித்தத்திற்கு முற்றும் முழுவதுமாக ஒப்படைக்கும் போதே, அந்தக் கிருபையின் நோக்கத்தின் பலனை தங்கள் வாழ்விலே கண்டடைகின்றார்கள். மரியாளோ: இதோ, நான் ஆண்டவருக்கு அடிமை, உம்முடைய வார்த்தையின்படி எனக்கு ஆகக்கடவது என்று தேவ சமூகத்திலே தன்னைத் தாழ்த்தினாள். தன் பிள்ளையை கொலை செய்யும்படி மத்தலைவர்கள், சிறப்பு குடிமக்கள் வகை தேடுகின்றார்கள் என்று ஒரு தாயானவள், அறிந்து கொள்ளும் போது அந்த வேதனை எப்படிப்பட்டதாக இருக்கும். கொலை செய்ய தேடுகின்றவர்கள் அந்த பிள்ளையின் பெற்றோரை குறித்து என்ன கூறுவார்கள். சிலுவை மரணம் அக்காலத்திலே, மிகவும் நிந்தையுள்ள மரணமாக இருந்தது, ஒரு தாயானவள் எப்படி அதை பார்த்து சகித்து கொள்ள கூடும். இவைகள் யாவும் இன்று இலகுவாக நமக்கு தோன்றலாம், ஆனால்,மரியாளோ அவைகள் யாவையும் தன் இருதயத்திலே வைத்து, தேவகிருபையினாலே எல்லாவற்றையும் தேவ சித்தப்படி செய்து முடித்தாள். பிரியமானவர்களே, தேவ சித்தமானது நம் வாழ்விலே நிறைவேறும்படிக்கே தேவ கிருபையானது நமக்கு கொடுக்கப்படுகின்றது. நாம் சகல சத்தியத்திலும் நடத்தப்படுவதற்கு சத்திய ஆவியானவர் நம்மோடு இருக்கின்றார். தேவ அன்பனது தன்னில் நிலைத்திருக் கின்றது என்று கூறுகின்ற எவனும் தேவனுடைய சத்திய வார்த்தைகளாகிய கற்பனைகளை கைகொள்கின்றான். அவன் விசுவாசத்திலே நிலைத்திருப்தினால், உலகத்தின் பேக்கின்படி வாழாமல், இந்த உலகத்தை ஜெயங் கொள்கின்றான்.

**லூக்கா 1:38**

**இதோ, நான் ஆண்டவருக்கு அடிமை, உம்முடைய வார்த்தையின்படி எனக்கு ஆகக்கடவது என்றாள்.**

**ஜெபம்:** வாக்கு மாறாத தேவனே, நான் எப்போதும் உம்முடைய வார்த்தையில் நிலைத்திருந்து, உம்முடைய சித்தத்தை என் வாழ்விலே நிறைவேற்றி முடிக்க எனக்கு பெலன் தந்து என்னை வழிநடத்திச் செல்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# தேவ கிருபையை அறிந்தவர்கள் யார்?

ஒரு ஊரிலே வாழ்ந்து வந்த விசுவாசினயாவன், தன் இளைமைக் கால த்திலே கிரமமாக கல்வி கற்று, பட்டப்படிப்பை முடித்து நல்ல வேலை யொன்றிலே அமர்ந்து கொண்டான். ஆண்டுகள் கடந்து சென்றதும்அவ னுடைய பேச்சுக்களிலே பெருமையும் அகங்காரமும் இருப்பதை, சபை யின் மேய்ப்பரானவர் கண்டு கொண்டார். ஒருநாள் அவனைத் தனியே அழைத்து, அவனுடைய நிலைமைகளைக் குறித்து அவ னோடு உரையாடினார். அவனோ: என்னுடைய வாழ்க்கையைப் பாருங்கள், என் முன்னேற்றத் தைப் பாருங்கள்! தேவன் எப்ப டியாக என்னை ஆசீர்வதித்திருக்கின்றார் என்பதை அறிந்திருக்கின் றீர்கள். கல்வியிலும் வேலையிலும் உயர்வுகள். தேவன் என்னோடிரு க்கின்றார். தேவ கிருபை என்னோடிக்கின்றது என்று மேய்ப் பருக்கு போதிக்க ஆரம்பித்தான். மேய்ப்பரோ அவனைப் பார்த்து: மகனே, உன் னுடைய கம்பனியில் உனக்குமேல் வேலை செய்யபவர்கள் எல்லா ரும், இயேசுவை சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டவர்களா? அவர் கள் எல்லாரும் உன்னைவிட அதிகமாக உழைக்கின்றார்கள் அல்லவா? அவர்களுடைய வாழ்க்கை இந்த உலகத்திலே செழித் திருக்கின்றது என்பதை நீ அறிந்திருக்கின்றாய். அப்படியானல், தேவனை அறியாத அவர்கள் உன்னைவிட அதிகமாக ஆசீர்வதிக்கப்பட்டிருக்கி ன்றார்களா? உலகிலே எத்தனை ஐசுவரியவான்கள் இருக்கின்றார்கள். அவர்களில் பெரும்பான்மையானோர் தேவனை அறியாதவர்கள். தேவ னுடைய இரக்கத்தையும் கிருபையையும் உலக ஐசுவரியத்தினால் அள ப்பதி ல்லை. தேவன் உன்மேல் நீடிய பொறுமையாய் இருப்பது அவரு டைய இரக்கம் என்பதை அறிந்து கொள். முதலாவதாக, தாழ்மையுள் ளவர் கள் மேல் தேவ கிருபை தங்கும் என்ற சத்தியத்தை அறிந்து கொள். தேவன் பெருமையுள்ளவர்களுக்கு எதிர்த்து நிற்கின்றார் என்றும் தாழ்மையுள்ளவர்களுக்கோ கிருபையை அளிக்கின்றார் என்ற வேத வார்த்தையை மறந்துபோகாதே. “தேவதயவு நீ குணப்படும்படி உன்னை ஏவுகிறதென்று அறியாமல், அவருடைய தயவு பொறுமை நீடியசாந்தம் இவைகளின் ஐசுவரியத்தை அசட்டைபண்ணாதே.” மனத்தாழ்மையும், சாந்தத்தையும் ஆண்டவர் இயேசுவிடம் இருந்து கற்றுக் கொள் என்று அறிவுரை கூறினார். பிரியமானவர்களே, நீங்கள் தேவகிருபையை பெற்ற வர்களா? அதை எதனால் அறிந்திருக்கின்றீர்கள்? மனத்தாழ்மையும் கீழ் ப்படியும் உங்களிடம் உண்டா என்று ஆராய்ந்து அறிந்து கொள்ளுங்கள்.

**1 பேதுரு 5:5**

பெருமையுள்ளவர்களுக்கு தேவன் எதிர்த்து நிற்கிறார், தாழ் மையுள்ளவர்களுக்கோ கிருபை அளிக்கிறார்.

**ஜெபம்**: கிருபை நிறைந்து தேவனே, உம்முடைய கிருபையின் மேன் மையையும், கிருபையின் நோக்கத்தையும் நான் அறிந்து உணர்ந்து மனத் `தாழ்மையோடும், கீழ்படிவோடும் ஜீவனம் பண்ண என்னை வழிநடத்திச் செல்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# எதைக் குறித்து மேன்மை பாராட்டுவேன்?

ஒரு விசுவாசியானவன் எப்படியாக இந்த உலகத்திலே வாழ வேண்டும் என்பதை குறித்து நம்முடைய ஆண்டவராகிய இயேசு தாமே வாழ்ந்து காட்டினார். எப்படியாக இயேசுவானவர் தேவகிருபையிலும், அதிகமதிக மாய் விருத்தியடைந்தார் என்பதைக் குறித்து கடந்து நாட்களிலே தியா னித்தோம். ஆண்டவர் இயேசுதாமே, வெளியரங்கமாக தம்முடைய திருப்ப ணியை ஆரம்பிப்பதற்கு முன்குறித்த காலம் வந்தபோது, அவர் எல்லா நீதி யும் நிறைவேற்ற வேண்டும் என்பதை கற்றுக் கொடுத்தார். அவரை பிசாசா னவன் சோதிக்கும் போது: "பிசாசு அவரை மிகவும் உயர்ந்த மலையின் மேல் கொண்டுபோய், உலகத்தின் சகல ராஜ்யங்களையும் அவைகளின் மகிமையையும் அவருக்குக் காண்பித்து: நீர் சாஷ்டாங்கமாய் விழுந்து, என்னைப் பணிந்துகொண்டால், இவைகளையெல்லாம் உமக்குத் தருவேன் என்று சொன்னான்." காரியம் அப்படியாக இருந்தால், இந்த உலகத்தின் ராஜ்யங்களையும் அதன் மகிமையையும் வைத்து தேவ ஆசீர்வாதங்களை கணக்கிட முடியுமோ? ஆனால், இன்று சில விசுவா சிகள் கூட உலகத்தால் வரும் மகிமையை மேன்மை பாரட்டுகின் றார் கள். யோசேப்பு, தானியேல், எஸ்தர், நெகேமியா போன்ற மனிதர்களை தேவன்தாமே அந்நிய தேசத்திலே உயர்த்தினார். அவர்கள் தங்கள் உயர்வைக் குறித்து மேன்மைபாராட்டாமல், தேவன் எதற்காக தங்களை ஏற்டுத்தினாரோ, அந்தக் காரியம் நிறைவேறும்படி, தேவனுடைய வார்த் தைக்கு தங்களை ஒப்புக் கொடுத்தார்கள். அவர்கள் வழியாக தேவ சித்தம் நிறைவேறியது. தங்களுக்குண்டானவைகளை தேவ ராஜ்யத்தின் மேன்மைகாக செலவு செய்தார்கள். ஆனால், இன்று விசுவாசிகள் என்று அழைத்துக் கொள்ளும் சிலர், தங்கள் கல்வி, வேலை, ஆஸ் திகள், அந்தஸ்துக்களை குறித்து மேன்மைபாராட்டிக் கொள்கின்றார்கள். தங்கள் வாழ்க்கையில், தேவனுக்கென்று ஒரு பகுதியையும், தங்களு க்கென்று பெரும் பகுதியையும் வைத்துக் கொள்கின்றார்கள். பிரியமான வர்களே, நீங்கள் எந்த நிலையிலே இருந்தாலும், உங்கள் மேன்மை பாராட்டுதல் தேவனுக்கேற்ற கிரியைகளினாலே வெளிப்படுத்தப்பட வேண்டும். விசுவாசியானவன், ஆண்டவர் இயேசுவின் சிலுவையையும், அவரால் உண்டான கிருபையையும் தன்னுடைய கிரியைகள் வழியாக காண்பிக்க வேண்டும்.

**கலாத்தியர் 6:14**

நானோ நம்முடைய கர்த்த ராகிய இயேசுகிறிஸ்துவின் சிலுவையைக் குறித்தேயல்லாமல் வேறொன்றையுங் குறித்து மேன்மைபாராட்டாதிருப் பேனாக;

**ஜெபம்**: மேன்மையான ராஜ்யத்திற்காக என்னை அழைத்த தேவனே, உம்மோடு வாழ்வது எத்தனை பாக்கியம் என்பதை உணர்ந்து கொள்ளும் இருதயத்தைத் தந்து உம்முடைய வழியிலே என்னை நடத்திச் செல்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

📖 மாலை வாசகம் – எபிரெயர் 10:38 – 39

# சத்திய வழியில் நடத்துகின்றவர் நமக்குள்ளே!

*அன்று தேவ ஜனங்களுக்கு கொடுக்கப்பட்ட நியாயப்பிரமாணமானது வரப்போகிற நன்மைகளின் நிழலாய்மாத்திரம் இருந்தது. அந்த நன்மை களின் பொருள் வெளிப்பட காலமான போது, இயேசுகிறிஸ்துவினு டைய சரீரம் ஒரேதரம் பலியிடப்பட்டதினாலே, அந்தச் சித்தத்தின்படி நாம் பரிசுத்தமாக்கப்பட்டிருக்கிறோம். மீட்பராகிய இயேசுவோ, பாவ ங்களுக்காக ஒரே பலியைச் செலுத்தினார். பரிசுத்தமாக்கப்படுகிறவர் களை ஒரே பலியினாலே இவர் என்றென்றைக்கும் பூரணப்ப டுத் தியிருக்கிறார். அன்று வரப்போகி ன்ற நன்மைகளின் நிழலாய் பிர மாணங்களை கொடுத்தவர், இன்று நமக்குள்ளே வாசம் பண் ணுகின்றார். "இதைக்குறித்துப் பரிசுத்த ஆவியானவரும் நமக் குச் சாட்சிசொல்லுகிறார் எப்படி யெனில்: அந்த நாட்களுக்குப்பி ன்பு நான் அவர்களோடே பண் ணும் உடன்படிக்கையாவது: நான் என்னுடைய பிரமாணங்களை அவ ர்களுடைய இருதயங்களில் வைத்து, அவைகளை அவர்களுடைய மன தில் எழுதுவேன் என்று கர்த்தர் சொல்லுகிறாரென்பதை உரைத்தபின்பு, அவர்களுடைய பாவங்களையும் அவர்களுடைய அக்கிரமங்களையும் நான் இனி நினைப்பதில்லை என்பதைச் சொல்லுகிறார். இவைகள் மன்னிக்கப்பட்டதுண்டானால், இனிப் பாவத்தினிமித்தம் பலி செலுத்த ப்படுவதில்லையே." என்பதை எபிரரெயர் 10ம் அதிகாரத்திலே வாசிக் கின்றோம். இவைகள் நம்முடைய நீதியின் கிரியைகளினாலே உண்டாக வில்லை, மாறாக தேவ கிருபையினாலே இலவமாக உண்டாயிற்று. எப்படி உண்டானது? "கர்த்தராகிய இயேசுவை நீ உன் வாயினாலே அறிக்கையிட்டு, தேவன் அவரை மரித்தோரிலிருந்து எழுப்பினாரென்று உன் இருதயத்திலே விசுவாசித்தால் இரட்சிக்கப்படுவாய். நீதியுண்டாக இருதயத்திலே விசுவாசிக்கப்படும், இரட்சிப்புண்டாக வாயினாலே அறி க்கைபண்ணப்படும் என்று வேதம் கூறுகின்றது. ஆண்டவர் இயேசுவின் இரத்தத்தினாலே வேறு பிரிக்கப்பட்டிருக்கின்றோம். அதனால் யாவும் முடிந்து விட்டதா? இல்லை விசுவாசிகள், தங்கள் விசுவாசத்தின் கிரியைகளை தேவ பயத்தோடு நடப்பிக்க வேண்டும். அந்தக் கிரியை களை செய்து முடிப்பதற்கு கிருபையின் ஆவி நமக்கு கொடுக்க ப்பட்டிருக்கின்றது.*

**2 கொரிந்தியர் 7:1**

**பிரியமானவர்களே, மாம்சத்தி லும் ஆவியிலும் உண்டான எல்லா அசுசியும் நீங்க, நம் மைச் சுத்திகரித்துக்கொண்டு, பரிசுத்தமாகுதலை தேவபயத் தோடே பூரணப்படுத்தக்கட வோம்.**

**ஜெபம்:** நித்திய வாழ்விற்கு என்னை அழைத்த தேவனே, உம்முடைய சித்தத்தின்படி செய்து, வாக்குத்தத்தம்பண்ணப்பட்டதைப் பெறு ம்படிக்குப் பொறுமையோடுநியமிக்கப்பட்ட ஓட்டத்தில் ஓட என்னை பெல ப்படுத்தி நடத்துவீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# கொடுக்கப்பட்ட கிருபையின் ஆவி

பிரிமானவர்களே, கிருபையின் ஆவியை அசட்டை பண்ணாதிருங்கள். "ஆகையால், சகோதரரே, நாம் பரிசுத்த ஸ்தலத்தில் பிரவேசிப்பதற்கு இயேசுவானவர் தமது மாம்சமாகிய திரையின் வழியாய்ப் புதிதும் ஜீவனுமான மார்க்கத்தை நமக்கு உண்டுபண்ணினபடியால், அந்த மார்க்கத்தின்வழியாய்ப் பிரவேசிப் பதற்கு அவருடைய இரத்தத்தினாலேநமக்குத் தைரியம் உண்டாயிருக்கிறபடியினாலும், தேவனுடைய வீட்டின்மேல் அதிகாரியான மகா ஆசாரியர் நமக்கு ஒருவர் இருக்கிறபடியினாலும்" நாம் நடத்த வேண்டிய கிரியைகள் உண்டு. நியமிக்கப்பட்ட இந்த ஓட்டத்திலே நாம் தனியாக ஓடுவதில்லை. சத்திய ஆவியாகிய துணையாளர் நம்மோடிருக்கின்றார். எனவே, துர்மனசாட்சி நீங்கின உண்மையுள்ள இருதயமும், சுத்த ஜலத்தால் கழுப்பட்ட சரீரமுள்ளவர்களாகவும், விசுவாசத்தின் பூரண நிச்சயத்தோடும் தேவனிடத்திலே சேர வேண்டும். எந்த சூழ்நிலையிலும் நம்முடைய நம்பிக்கையை நாம் அறிக்கை செய்ய வேண்டும். அன்புக்கும் நற்கிரியைகளுக்கும் நாம் ஏவப்படும்படி ஒருவரையொருவர் கவனிக்க வேண்டும். சபை கூடிவருதலைச் விட்டுவிட கூடாது. நாளானது சமீபித்து வருவதால், பக்திவிருத்தியடையும்படிக்கு ஒருவருக்கொருவர் புத்திசொல்லவேண்டும். சத்தியத்தை அறியும் அறிவை அடைந்தபின்பு நாம் மனப்பூர்வமாய்ப் பாவஞ்செய்கிறவர்களாயிருந்தால், பாவங்களினிமித்தம் செலுத்தத்தக்க வேறொருபலி இனியிராமல், நியாயத்தீர்ப்பு வருமென்று பயத்தோடே எதிர்பார்க்குதலும், விரோதிகளைப் பட்சிக்கும் கோபாக்கினையுமே இருக்கும். மோசேயினுடைய பிரமாணத்தைத் தள்ளுகிறவன் இரக்கம்பெறாமல் இரண்டு மூன்று சாட்சிகளின் வாக்கினாலே சாகிறானே. தேவனுடைய குமாரனைக் காலின்கீழ் மிதித்து, தன்னைப் பரிசுத்தஞ்செய்த உடன்படிக்கையின் இரத்தத்தை அசுத்தமென்றெண்ணி, கிருபையின் ஆவியை நிந்திக்கிறவன் எவ்வளவு கொடிதான ஆக்கினைக்குப் பாத்திரவானாயிருப்பானென்பதை யோசித்துப்பாருங்கள். ஜீவனுள்ள தேவனுடைய கைகளில் விழுகிறது பயங்கரமாயிருக்குமே என்று எபிரெயர் 10ம் அதிகாரத்திலே தெளிவாக கூறப்பட்டிருக்கின்றது. எனவே, கிருபை, கிருபை என்று கூறிக் கொண்டு, சுய இச்சகைளின்படி நடந்து, பாவத்திலே நிலைநிற்கின்றவன் தனக்கு கொடுக்கப்பட்ட கிருபையின் ஆவியை அசட்டை பண்ணுகின்றன். நீங்களோ, தேவ பயத்தோடு ஜீவனம் பண்ணுங்கள்.

**எபிரெயர் 10:29**

**கிருபையின் ஆவியை நிந்திக்கிறவன் எவ்வளவு கொடிதான ஆக்கினைக்குப் பாத்திரவானாயிருப்பானென்பதை யோசித்துப்பாருங்கள்.**

**ஜெபம்:** மேன்மையானவைகளுக்காக என்னை அழைத்த தேவனே, நீர் கொடுத்த மிகுந்த பலனுக்கேதுவான தைரியத்தை நான் விட்டுவிடாமல், முடிவு பரியந்தம் சத்தியதில் நிலைத்திருக்க என்னை பெலப்படுத்துவீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

செவ்வாய் | தை 20

📖 மாலை வாசகம் – மத்தேயு 5:14 –16

# நற்கிரியைகளை உங்களில் ஆரம்பித்தவர்....

**பிலிப்பியர் 1:5**

உங்களில் நற்கிரியையைத் தொடங்கினவர் அதை இயேசுகிறிஸ்துவின் நாள்பரியந்தம் முடிய நடத்திவருவாரென்று நம்பி,

தேவ ஊழியராகிய பவுல், பிலிப்பி பட்டணத்திலுள்ள விசுவாசிகளுக்கு எழுதும் போது: “தேவனுக்கு மகிமையும் துதியும் உண்டாகும்படி இயேசுகிறிஸ்துவினால் வருகிற நீதியின் கனிகளால் நிறைந்தவர்களாகி, நீங்கள் கிறிஸ்துவின் நாளுக்கென்று துப்புரவானவர்களும் இடறலற்றவர்களுமாயிருக்கவும் வேண்டுதல் செய்கிறேன் என்று கூறியருப்பதை பிலிப்பியர் 1ம் அதிகாரத்திலே காணலாம். இதுவே நம்முடைய வாழ்வின் முதன்மையான இலக்காக காணப்பட வேண்டும். அவர்கள் கிருபையினால் விசுவாசத்தைக் கொண்டு இரட்சிக்கப்பட்டது சத்தியம். அதில் எந்த மாறுதலும் இல்லை. இப்பொழுது தேவகிருபையினாலே, நற்கிரியைகள் நடத்தப்பட வேண்டும். அவை வெளியரங்கமாக நடத்தப்படும் தானதர்மங்கள் மட்டுமல்ல, இருதயத்திலே சுத்தமுள்ளவர்களாகவும், இடறலற்றவர்களுமாக காணப்பட வேண்டும். நம் வாழ்வின் வழியாக தேவனுடைய நாமம் உடன் சகோதர்கள், அயல வர்கள், சொந்தக்கள், நண்பர்கள், சக வேலையாட்கள், சக மாணவ ர்கள் மத்தியிலே மகிமைப்படும்படி, ஆண்டவர் இயேசுவினால் வருகி ன்ற நீதியின் கனிகளால் நாம் நிறைந்தவர்களாகும்படி நாளுக்கு நாள் உள்ளான மனுஷன் புதிதாக்கப்பட வேண்டும். எப்படி ஒரு விசுவாசியானவன் கனி கொடுக்க முடியும்? “நானே திராட்சச்செடி, நீங்கள் கொடிகள். ஒருவன் என்னிலும் நான் அவனிலும் நிலைத்திருந்தால், அவன் மிகுந்த கனிகளைக் கொடுப்பான் என்னையல்லாமல் உங்களால் ஒன்றும் செய்யக்கூடாது. ஒருவன் என்னில் நிலைத்திராவிட்டால், வெளியே எறியுண்ட கொடியைப்போல அவன் எறியுண்டு உலர்ந்து போவான் அப்படிப்பட்டவைகளைச் சேர்த்து, அக்கினியிலே போடுகிறார்கள் அவைகள் எரிந்துபோம். நீங்கள் என்னிலும், என் வார்த்தைகள் உங்களிலும் நிலைத்திருந்தால், நீங்கள் கேட்டுக்கொள்வதெதுவோ அது உங்களுக்குச் செய்யப்படும். நீங்கள் மிகுந்த கனிகளைக் கொடுப்பதினால் என் பிதா மகிமைப்படுவார், எனக்கும் சீஷராயிருப்பீர்கள்” என்று ஆண்டவராகிய இயேசு கூறியதை யோவான் 15ம் அதிகாரத்திலே வாசிக்கலாம். எனவே, உங்கள் சாட்சியான வாழ்க்கையைக் குறித்து மற்றவர்கள் சாட்சி கூறட்டும். “மனுஷர் உங்கள் நற்கிரியைகளைக் கண்டு, பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவை மகிமைப்படுத்தும்படி, உங்கள் வெளிச்சம் அவர்கள் முன்பாகப் பிரகாசிக்கக்கடவது.”

**ஜெபம்**: மகிமையின் தேவனே, ஆண்வராகிய இயேசு வெளிப்படும் போது நான் கறை திறையற்றவனாக காணப்படும்படிக்கு, நீர் எனக்கு உணர்வுள்ள இருதயத்தைத் தந்து கிருபையினாலே வழிநடத்திச் செல்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# தேவன் ஒருவருக்கே பயப்படவேண்டும்

மக்கெதோனியா தேசத்து நாடுகளில் ஒன்றிற்குத் தலைமையானதும் ரோமர் குடியேறினதுமான பிலிப்பி பட்டணத்திலே தேவ ஊழியர்களாகிய பவுலும் சீலாவும் தங்கியிருந்த நாட்களிலே, ஒரு சமயம், "ஜனங்கள் கூட்டங்கூடி, அவர்களுக்கு விரோதமாய் எழும்பினார்கள். அதிகாரிகள் அவர்கள் வஸ்திரங்களைக் கிழித்துப்போடவும், அவர்களை அடிக்கவும் சொல்லி, அவர்களை அநேக அடி அடித்தபின்பு, சிறைச்சாலையிலே வைத்து அவர்களைப் பத்திரமாய்க் காக்கும்படி சிறைச்சாலைக்காரனுக்குக் கட்டளையிட்டார்கள். அவன் இப்படிப்பட்ட கட்டளையைப் பெற்று, அவர்களை உட்காவலறையிலே அடைத்து, அவர்கள் கால்களைத் தொழுமரத்தில் மாட்டிவைத்தான். நடுராத்திரியிலே பவுலும் சீலாவும் ஜெபம்பண்ணி, தேவனைத் துதித்துப் பாடினார்கள் காவலில் வைக்கப்பட்டவர்கள் அதைக் கேட்டுக்கொண்டிருந்தார்கள். சடிதியிலே சிறைச்சாலையின்அஸ்திபாரங்கள் அசையும்படியாக பூமி மிகவும் அதிர்ந்தது. உடனே கதவுகளெல்லாம் திறவுண்டது. எல்லாருடைய கட்டுகளும் கழன்றுபோயிற்று." இந்த சம்பவத்தை குறித்து நீங்கள் அறிந்திருப்பீர்கள் என நம்புகின்றேன். இதைக் குறித்து விளக்கமாக அப்போஸ்தல நடபடிகள் 16ம் அதிகாரத்திலே காணலாம். இப்படியான பாடுகள் வழியாகத்தான் பிலிப்பி பட்டணத்திலே சுவிசேஷம் அறிவிக்கப்பட்டது. அந்த பட்டணத்திலே தேவ ஊழியர்களாகிய பவுலும்சீலாவும சில நாட்களே தங்கிருந்தார்கள். அவர் ஆரம்பித்த அந்த அற்பமான ஆரம்பத்தை, தேவன் பெருகப் பண்ணினார். தேவ ஊழியர்கள் அந்த இடத்தைவிட்டு சென்றபின்பும், அங்கிருந்த ஒரு சில விசுவாசிகள், சுவிசேஷத்தின் நற்கிரியைகளை, மனிதர்களுக்கு பயப்படாமல், உபத்திரவங்களுக்கு அஞ்சாமல், தேவ பயத்தோடு செய்து வந்தார்கள். சுவிசேஷம் அவர்களுக்கு அறிவிக்கப்பட்ட நாள்முதல அத ற்கு உடன்பட்டவர்களானார்கள். தேவ கிருபையை பெற்ற அருமையான சகோதர சகோதரிகளே, நீங்கள் ஆரம்பத்திலே அறிந்த சுவிசேஷத்தில் அசையாமல் நிலைத்திருந்து, உங்கள் சரீரங்களை மாத்திரம் கொல்ல வல்லவர்களுக்குபயப்படாமல், சரீரத் தோடுகூட ஆத்துமாவையும் நரகத்தில் தள்ள வல்லவராகிய தேவனாகிய கர்த்தர் ஒருவருக்கே பயந்தவர்களாக தேவனுக்கேற்ற நற்கிரியைகளிலே நாளுக்கு நாள் வளர்ந்து பெருகுவோமாக. தேவ ஆவியானவர் உங்களை வழிநடத்திச் செல்வராக.

**2 தீமோத்தேயு 3:16**

**தேவனுடைய மனுஷன் தேறினவனாகவும், எந்த நற்கிரியையுஞ் செய்யத் தகுதியுள்ளவனாகவும் இருக்கும்படியாக,**

**ஜெபம்:** பராக்கிரமுமுள்ள தேவனாகிய கர்த்தாவே, உயர்விலும் தாழ்விலும் எல்லா சூழ்நிலைகளிலும், மனிதர்கள் முன்னிலையில், நான் உமக்கு சாட்சியாக வாழ நீர் எனக்கு பெலன் தந்து வழிநடத்திச் செல்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# குறைகள் நிறைவாகமாற வேண்டும்

ஒரு குக்கிராமத்திற்கு சென்ற சமூகத் தொண்டர் ஒருவர், அந்த கிராமத்திலே வாழும் பிள்ளைகள் அடிப்படிக் கல்வி, சுகாதாரம் போன்றவற்றை அறியாதிருந்ததால், அந்த கிராமத்திலே, ஒரு சிறி பாடசாலையை ஆரம்பித்தார். அது ஒரு அற்பமான ஆரம்பமாக இருந்தது. சில ஆண்டுகள், அந்த கிராமத்திலே அவர் பணிபுரிந்த பின்பு, பாடசாலையை மேம்படுத்த பலர் முன்வந்தார்கள். சில ஆசிரியர்கள் சேவையாற்றும்படி முன்வந்தார்கள். பாடசாலை விருத்தியடைந்து செல்வதை கண்டு அந்த தொண்டர் மனமகிழ்ச்சியடைந்தார். அந்த சேவையை அவர்களிடம் நல் மனதோடு கையளித்துவிட்டு, அடுத்த கிராமத்தை நோக்கி பயணம் செய்தார். பல ஆண்டுகளுக்கு பின், பெரிதாக வளர்ச்சியடைந்த அந்த பாசாலையிலே, மனவேதனை தரக்கூடிய காரியங்களை நடைபெறுவதை கடிதம் வாயிலாக அறிந்து கொண்டார். அதனால், அவர் அந்த பாடசாலையை தன் வாயினாலே சபிக்காமல், அந்த பாடசாலை ஆரம்பித்த நோக்கம் நிறைவேற வேண்டும் என்று தனக்குள் நிச்சயித்துக் கொண்டு, குறைகள் நிறைவாக வேண்டும் என்று அதிகாரிகளுக்கு ஆலோசனை கூறினார். பாடசாலையை இயக்குகின்றவர்கள், ஒழுங்காக அதை நடத்த வேண்டும் என்று தேவனாகிய கர்த்தரிடத்திலே அனுதினமும் ஆர்வத்தோடு வேண்டுதல் செய்தார். அவ்வண்ணமாகவே, அப்போஸ்தலராகிய பவுல், பிலிப்பி பட்டணத்திலே தன் வழியாக தேவன் ஆரம்பித்த ஊழியம் வளர்ந்திருப்பதை அறிந்தார். ஆனாலும், அங்கே பெருமையும், பிரிவினைகளும் ஏற்பட்டிருப்பதையும், விசுவாசிகள் நோக்கமிழந்து போகின்றார்கள் என்று அறிந்து போது, அவர்களுடைய அழைப்பின் மேன்மைனயை நிருபத்தின் வாயிலாக விளக்கிக் கூறினார். அது மாத்திரமல்ல, அவர்கள் உணர்வடைய வேண்டும். நித்திய ஜீவனை பெற்றுக் கொள்ள வேண்டும் என்தற்காக, அவர் பண்ணுகின்ற ஒவ்வொரு விண்ணப்பத்திலும் அவர்களுக்காக சந்தோஷத்தோடே விண்ணப்பம்பண்ணி, அவர்களை நினைக்கிறபொழுதெல்லாம் என் தேவனை ஸ்தோத்தரிக்கின்றேன் என்று கூறினார். அதுபோலவே, நாமும் குறைகளை காணும்போது, அதன் ஆராய்வதில் நின்றுவிடாமல், அந்த குறைகள் யாவும் கிறிஸ்துவுக்குள் நிறைவாக வேண்டும் என்ற நல்மனத்துடன், ஊக்கமாக விண்ணப்பம் செய்ய வேண்டும். மற்றவர்களை நினைக்கும் போது உங்கள் மனதிலே தோன்றும் நினைவுகள் என்ன?

**பிலிப்பியர் 1:6**

**நான் உங்களை நினைக்கிறபொழுதெல்லாம் என் தேவனை ஸ்தோத்திரிக்கிறேன்.**

**ஜெபம்:** உன்னதமான தேவனே, சுவிசேஷத்தைக் குறித்த வாஞ்சையும், குறைவுகளை காணும்போது, அவைகள் நிறைவாக வேண்டும் என்ன உணர்வுள்ள மனத்தையும் எனக்கு தந்து என்னை வழிநடத்திச் செல்வீராக. இரட் சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# கிருபையில் பங்குள்ளவர்களானதால்

போராட்டம் நிறைந்த வாழ்க்கையிலே, தேவ கிருபை இல்லாமல் விசுவாசிகள் நாளந்தம் எதிர்நோக்கும் சவால்களை மேற்கொள்ள முடியாது. தேவ கிருபையானது பல வழிகளிலே நமக்கு வெளிப்படுத்தப்படுகின்றது. அவைகளிலே மனித தயானவானது ஒரு வழியாக இருக்கின்றது. சில வேளைகளிலே விசுவாசிகள் இதை உணராது போய்விடுகின்றார்கள். தேவ ஊழியராகிய பவுல் சிறையிலிருந்து பிலிப்பியருக்கு நிரூபத்தை எழுதினார். அவர் சிறையிலே இருப்பதை அறிந்து கொண்ட சிலர், அவரைக் குறித்த வெட்கமடைந்து, அவருக்கு உதவி செய்யாமல் போய்விட்டார்கள். ஆனால்,பிலிப்பி பட்டணத்திலே இருந்த விசுவாசிகளோ, எப்போதும் நன்றியறிதலுள்ளவர்களாக இருந்தார்கள். தேவ ஊழியவராகிய பவுல் பல நெருக்கங்கள், கட்டுக்கள் மத்தியிலும் கிறிஸ்துவின் சுவிசேஷத்தை திடமாக பிரசங்கித்து வந்தார். அந்த தைரியமானது அவருடைய சொந்த பெலத்தினால் உண்டாகவில்லை, மாறாக அது தேவ கிருபையினால் உண்டானது. தேவ கிருபையானது அவருக்கு வெளிப்படுவததிலே பிலிப்பி பட்டணத்து விசுவாசிகள் பங்குள்ளவரானார்கள். “என் கட்டுகளிலும், நான் சுவிசேஷத்திற்காக உத்தரவுசொல்லி அதைத் திடப்படுத்திவருகிறதிலும், நீங்கள் அனைவரும் எனக்கு அளிக்கப்பட்ட கிருபையில் பங்குள்ளவர்களானதால், உங்களை என் இருதயத்தில் தரித்துக்கொண்டிருக்கிறபடியினாலே, உங்களெல்லாரையுங்குறித்து நான் இப்படி நினைக்கிறது எனக்குத் தகுதியாயிருக்கிறது.” என்று அப்போஸ்தலராகிய பவுல், தனது நன்றியை பிலிப்பி சபையின் விசுவாசிகளுக்கு தெரியப்படுத்தினார். அவர் அவர்களுடைய உபகாரத்தை நாடி ஊழியம் செய்யவில்லை, தன் பிரயாசத்தின் பலனானவர்களாக பிலிப்பு பட்டணத்தின் விசுவாசிகள் பெற்றுக் கொள்ளவதைப் பார்க்கிலும் கொடுப்பதே நல்லது என்ற திவ்விய சுபாவத்திலே வளர்ந்திருப்பதைக் கண்டு அவர் அவர்களை குறித்து பெரு மகிழ்ச்சியடைந்தார். இந்த சம்பவத்திலே தேவ ஊழியராகிய பவுலின் மனதும், பிலிப்பு சபையானரின் மனங்களும் ஒருமித்து இருந்தது. இரண்டு சாரராரும் நன்றியறிதலுள்ளவர்களாக இருந்தார்கள். அதுபோலவே, நாம் எந்தப் பக்கத்தில் இருந்தாலும், தேவ கிருபை வெளிப்படுதலிலே பங்குள்ளவர்களாக இருக்க வேண்டும். கொடுக்கின்றதிலும், நன்றியறிதலுள்ளவர்களாக இருப்பதிலும் வளர்ந்து பெருகின்றவர்களாக முன்னேறிச் செல்வோமாக.

**பிலிப்பியர் 1:7**

**நீங்கள் அனைவரும் எனக்கு அளிக்கப்பட்ட கிருபையில் பங்குள்ளவர்களானதால்**,

**ஜெபம்:** புது கிருபையை அனுதினமும் எனக்கு பொழியும் தேவனே, உம்முடைய கிருபையை மேன்மைபாராட்டுவதோடு நின்றுவிடாமல் அதிலே பங்குள்ளவனாக மாறும்படிக்கு உணர்வுள்ள இருதயத்தை தந்தருள்வீராக. இரட்சகர்இயேசுவழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# பெற்றுக் கொண்ட மனித தயவுகள்

ஒரு சபையிலே பல இக்கட்டுகள் துன்பங்கள் மத்தியிலே வாழ்ந்து வந்த விசுவாசியொருவருக்கு, உடன் சகோதரனொருவன் உதவி செய்தான். அந்த உதவி அநேகருடைய பார்வையிலே சிறிதானதாக காணப்பட்டாலும், அந்த நேரத்திலே, அந்த விசுவாசிக்கு அது மிகவும் பெரிதான ஆதரவாகவும், ஆறுதலாகவும் இருந்தது. பல ஆண்டுகள் சென்ற பின்பு, சில கசப்பான அனுபவங்களால், உதவி பெற்றவருக்கும், உதவி செய்தவருக்கும் இடையிலே மனநிலைமை வேறுபட்டதாக மாறிவிட்டது. அத்தருணத்திலே, உதவியை பெற்ற விசுவாசியானவன்: என்னுடைய இக்கட்டடின் நாட்களிலே, அவன் எனக்கு உதவி செய்யாதிருந்தால், ஆண்டவர் வேறொருவனை அனுப்பியிருப்பார் என்று உதவி செய்தவனுடைய காதுகளில் சென்றடையும்படி கடும் வார்த்தைகளை பேசினான். அதை கேள்விப்பட்ட சபையின் மேய்ப்பரானவர், உதவியை பெற்ற மனிதனுடைய நன்றியற்ற மனதைக் குறித்து மனவேதனை அடைந்தார். ஆம் பிரியமான சகோதர சகோதரிகளே, தேவனாகிய கர்த்தர் ஒவ்வொருவரைக் குறித்தும் நிர்ணயித்த காரியம் நிச்சயமாக நிறைவேறும். அந்த காரியத்திற்கு ஒருவேளை ஒருவர் உடன்படாதிருந்தால், தேவனாகி கர்த்தர்தாமே இன்னுமொருவர் வழியாக அதை நிறைவேற்றி முடிப்பார் என்பது மாறாத சத்தியம். ஆனால் இந்த சத்தியத்தை ஒருவரும் தங்கள் துர்குணத்திற்கு மூடலாக உபயோகிக்க கூடாது. அதாவது, தேவனுடைய வார்த்தைகள் வாதுக்கும், வழக்குக்கும், சண்டைக்கும், கலகங்களுக்கும் வழங்கப்படவில்லை. அவை நித்திய ஜீவனுக்குரியவைகள். விசுவாசிகள் தங்கள் மாம்ச எண்ணங்களை நிறைவேற்றும்படிக்கு தேவ வார்த்தைகளை தகாத முறையிலே பயன்படுத்தக்கூடாது. கடைசி நாட்களிலே, மனிதர்கள் நன்றியற்றவர்களாக இருப்பார்கள் என்ற பிரகாரமாக, விசுவாச மார்க்கத்தாரிலும் இந்த நன்றியற்ற தன்மைகள் வளர்ந்து கொண்டே போகின்றது. இந்த சபையில் இல்லாவிட்டால் இன்னுமொரு சபை. இந்த போதகர் இல்லை என்றால் அந்தப் போதகர் என்ற பிரகாரமாக கூறிக் கொள்கின்றார்கள். இவர்கிளடம் பெருமை தங்கியிருப்பதால், தேவ கிருபை இன்தென்று அறியாதிருக்கின்றார்கள். பிரியமானவர்களே, அவரவர் எப்படியாக நடந்து கொள்ளப் போகின்றார்கள் என்பது அவரவரது தனிப்பட்ட தீர்மானம். ஆனால், நீங்களோ, மனித தயவுகளை மறுதலிக்காமல், நன்றியறிதலுள்ளவர்ளாக வாழ்ந்து முன்னேறுங்கள்.

**கொலோசெயர் 3:15**

நன்றியறிதலுள்ளவர்களாயுமிருங்கள்.

**ஜெபம்**: மனித தயவுகளை ஏற்படுத்தும் தேவனே, பெற்றுக் கொண்ட மனித தயவுகளை முன்னிட்டு, மனிதர்களுக்கும் நன்யறிதலுள்ளவனாக வாழும்படிக்கு எனக்கு உணர்வுள்ள இருதயத்தை தந்து வழிநடத்திச் செல்வீராக. இரட்சகர் இயேசு வழி யாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# வேறு பிரிக்கபட்ட தேவ ஜனங்கள்

பாடசாலைக்கு செல்லும் மாணவர்கள் எல்லாரும் படித்து பட்டம் பெறுவதில்லை. அவர்களில் சிலர் கற்றவைகளின்படி வாழ்வதில்லை. எப்படியெனில், சுகாதார கல்வியை கற்றுக் கொள்ளும் மாணவர்களில் சிலர் அந்தப்பாடத்தில் எப்படி திறமைச் சித்தி பெறுவது என்பதிலேயே நோக்கமாயிருப்பார்கள். அப்படியாக திறமைச் சித்தி பெற்றவர்கள் எல்லாரும் கற்றவைகளை தங்கள் வாழ்விலே நடைமுறைப்படுத்துவதில்லை. அது போலவே, சுகாதரா கல்வியை கற்றுக் கொடுக்கும் ஒரு குறிப்பிட்ட ஆசிரியர், புகைப்பிடிக்கும் பழக்கமுள்ளவராக இருந்தார். காரியம் அப்படியாக இருப்பதால், பாடசாலை அவசியமில்லை, ஆசிரியர்கள் தேவையில்லை. மாணவர்களுக்கு கற்றுக் கொடுப்பதில் பலனில்லை என்று பாடசாலைகள் யாவையும் மூடி விடுவோம் என்று கூறலாமோ? இல்லை! அதுபோலவே, விசுவாச மார்க்கத்திலுள்ளவர்களில் சிலர் நன்றியறிதல் இல்லாதவர்களாக மாறிவிடுகின்றார்கள். அங்காங்கே ஊழியர்களிலும் சிலர் ஊழியத்தை ஆதயத் தொழிலாக செய்து வருகின்றார்கள். இவைகள் யாவும் அவரவர் கனிகளால் வெளி கொண்டுவரப்பட்டு, உறுத்திப்படுத்தப்படும். நியாந்தந்தீர்ப்பவர் நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவே. ஆனால், கர்த்தர் அன்றும் இன்றும் என்றும் தமக்கென்று ஒரு ஜனத்தை வைத்திருக்கின்றார். இந்த ஜனக்கூட்டத்தில் இடம்பெறும் ஊழியர்கள் தேவ கிருபையினாலே சத்தியத்தை சத்தியமாக சத்தியப்படி உபதேசம் செய்கின்றார்கள். அதை கேட்டும் தேவனுடைய ஜனக்கூட்டத்தில் இடம்பெறும் விசுவாசிகள் தேவ கிருபையினாலே மனத்தாழ்மையோடும் கீழ்படிவோடும் சத்தியத்தின்படி வாழ்க்கின்றார்கள். எனவே சத்தியத்தை மறுதலிக்கும் கூட்டத்தாரைப் பார்த்து சோர்வடைந்து, பின்னிட்டு, சத்திய மார்க்கத்தை விட்டு விலகாமல், பிலிப்பிய சபையோர், கர்த்தர் நிமித்தமாக எப்படியாக தேவ ஊழியராகிய பவுல் உயர்விலும் தாழ்விலும் தாங்கினார்களோ, நாமும் அப்படியான மனநிலையோடு வாழவேண்டும். அந்தப் பிரகாரமாக, தேவ ஊழியர்களும், அப்போஸ்தலர் பவுலைப் போல ஊழி யத்தை ஆதாயத்தொழிலாக செய்யாமல், கொடுக்கப்பட்ட மந்தைகளை அன்போடு நடத்த கற்றுக் கொள்ள வேண்டும். நாம் சத்திய வழியிலே நடக்க தேவ கிருபையானது நமக்கு கொடுக்கப்பட்டிருக்கின்றது.

**மத்தேயு 10:42**

சீஷன் என்னும் நாமத்தினிமித்தம்இந்தச் சிறியரில் ஒருவனுக்கு ஒருகலசம் தண்ணீர்மாத்திரம்குடிக்கக் கொடுக்கிறவனும் தன் பலனை அடையாமற்போகான் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார்.

**ஜெபம்:** பரலோக தேவனே, எந்தக்க காலத்திலும், எல்லா சூழ்நிலைகளிலும் நான் உம்முடைய ஜனம் என்று நீர் அழைக்கும் கூட்டத்திற்குள் இடம்பெற்றிருக்க என்னை உம்முடைய வழியிலே நடத்திச் செல்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# சோர்ந்த போகாதிருங்கள்!

ஒரு ஊரிலே இருந்த குறிப்பிட்ட மனிதனொருவன், சில ஆண்டுகளுக்கு பின், குறிபிட்ட ஒரு சந்தர்ப்பத்திலே, கோபத்தோடு "எல்லோரும் கள்வர்கள்" என்று தேவ ஊழியர்கள், விசுவாசிகள் யாவரைக் குறித்து ஒரு அறிக்கையை கூறினான். அதை கேட்டிக் கொண்டிருந்த இன்னுமொரு விசுவாசியானவன் கோபமடைந்து, நீதிமானாகிய லோத்தே நீ மட்டும் மீந்திருக்கின்றாய், எப்படி நீ உன் நீதியின் நற்கிரியைகளை காண்பிக்க போகின்றாய் என்பதை பார்ப்போம்" என்று பதிலடி கூறினான். அதனால் அங்கே கலகம் உண்டாயிற்று. ஒரு சாரார் அந்த மனிதனையும், இன்னுமொரு சாரார் மற்ற மனிதனையும் சார்ந்து கொண்டார் கள். ஆனால், தேவ பயத்தோடு வாழும் விசுவாசிகளோ, இரண்டு சாராருடைய நடத்தையினாலே, பிதாவாகிய தேவனுடைய நாமம், மனிதர்கள் மத்தியிலே தூஷிக்கப்படு கின்றது என்று மனவேதனை அடைந்தார்கள். சண்டையின் ஆரம்பம் மதகைத் திறந்து விடுகிறதுபோலிருக்கும் ஆதலால் விவாதம் எழும்பு முன் அதை விட்டு விடு (நீதி 17:14). தேவனுடைய சபை வழக்குக்கும் வாதுக்கும் உரியதல்ல. ஒருவன் தன் மதியீனத்தினால், துணிகரமாக மதியீனமான வார்த்தைகளை பேசினால், அவன் அதற்கு கணக்கு ஒப்புவிப்பான். "இதோ, எல்லாருக்கும் நியாயத்தீர்ப்புக் கொடுக்கிறதற் கும், அவர்களில் அவபக்தியுள்ளவர்கள் யாவரும் அவபக்தியாய்ச் செய் துவந்த சகல அவபக்தியான கிரியைகளினிமித்தமும், தமக்கு விரோத மாய் அவபக்தியுள்ள பாவிகள் பேசின கடின வார்த்தைகளெல்லாவ ற்றினிமித்தமும், அவர்களைக் கண்டிக்கிறதற்கும், ஆயிரமாயிரமான தமது பரிசுத்தவான்களோடுங்கூட கர்த்தர் வருகிறார் என்று முன்னறிவித்தான். இவர்கள் முறுமுறுக்கிறவர்களும், முறையிடுகிறவர்களும், தங்கள் இச்சைகளின்படி நடக்கிறவர்களுமாயிருக்கிறார்கள் இவர்களுடைய வாய் இறுமாப்பானவைகளைப் பேசும் தற்பொழிவுக்காக முகஸ் துதி செய்வார்கள். நீங்களோ பிரியமானவர்களே, நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் அப்போஸ்தலரால் முன் சொல்லப்பட்ட வார்த்தைகளை நினைவுகூருங்கள். கடைசிக்காலத்திலே தங்கள் துன் மார்க்கமான இச்சைகளின்படி நடக்கிற பரியாசக்காரர் தோன்றுவார்கள் என்று உங்களுக்குச் சொன்னார்களே." தேவ கிருபையைப் பெற்றவர் களே சோர்ந்து போகாமல் நற்கிரியைகளை தொடர்ந்து நடப்பியுங்கள்.

**ரோமர் 1:7**

**சோர்ந்துபோகாமல் நற்கிரியைகளைச் செய்து, மகிமையையும் கனத்தையும் அழியாமையையும் தேடுகிறவர்களுக்கு நித்தியஜீவனை அளிப்பார்.**

**ஜெபம்**: சர்வ வல்லமையுள்ள தேவனே, எங்கள் மகா பரிசுத்தமான விசுவாசத்தின்மேல் எங்களை உறுதிப்படுத்திக்கொண்டு, பரிசுத்த ஆவிக்குள் ஜெபம்பண்ணி, நற்கிரியைகளை நடப்பிக்க எனக்கு கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# தேவ களஞ்சியத்திற்குரியர்கள்...

கிறிஸ்துவுக்குள் பிரியமான சகோதர சகோதரிகளே, இன்னும் கொஞ்சக் காலம், நாம் கோணலும் மாறுபாடுமான உலகத்திலே வாழ வேண்டும். சத்துருவானன் கோதுமைக்குள் களைகளை விதைத்துவிட்டுப் போனது போல, நம் நடுவிலும் களைகள் உண்டு. அந்தக் களைகளை குறித்து ஆச்சரியப்படாதிருங்கள். இன்று சில விசுவாசிகள் களைகளைப் போன்றவர்களை உற்றுப் பார்த்து, அவை களை ஆராய்ந்து, அவைகளை அகற்ற வேண்டும் என்பதிலேயே தங்கள் வாழ்நாட்களை கழிக்கின்றார்கள். அதனால், தேவனாகிய கர்த்தர் தங்களுக்கு கொடுத்த பொறுப்பை மறந்து போய் விடுகின்றார்கள். நாம் நமக்கு கொடுக்கப்பட்ட பொறுப்பை நிறைவேற்றுவதிலேயே நாம் கவனமுள்ளவர்களாக இருக்க வேண்டும். முதலாவதாககளைகள் போய் சேர வேண்டி இடத்தில் சேரும் என்பதை மத்தேயு 13ம் அதிகாரம் 30ம் வசனத்திலேவாசிக்கின்றோம். நாமோதேவ களஞ்சியத்தில் சேர்க்கப்பட வேண்டிய கோதுமை மணிகளுக்கு ஒப்பாயிருக்கின்றோம். “நீங்கள் பூமிக்கு உப்பாயிருக்கிறீர்கள் உப்பானது சாரமற்றுப்போனால், எதினால் சாரமாக்கப்படும்? வெளியே கொட்டப்படுவதற்கும், மனுஷரால் மிதிக்கப்படுவ தற்குமே ஒழிய வேறொன்றுக்கும் உதவாது. “நீங்கள் உலகத்துக்கு வெளிச்சமாயிருக்கிறீர்கள் மலையின்மேல் இருக்கிற பட்டணம் மறைந்தி ருக்கமாட்டாது.விளக்கைக் கொளுத்தி மரக்காலால் மூடிவைக்காமல், விளக்குத் தண்டின்மேல் வைப்பார்கள் அப்பொழுது அது வீட்டிலுள்ள யாவருக்கும் வெளிச்சம் கொடுக்கும். இவ்விதமாய், மனுஷர் உங்கள் நற்கிரியைகளைக் கண்டு, பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவை மகிமைப்படுத்தும்படி, உங்கள் வெளிச்சம் அவர்கள் முன்பாகப் பிரகாசிக்கக்கடவது” என்று ஆண்டவராகிய இயேசு கூறியிருக்கின்றார். எனவே, தேவ நன்மையை பெற்ற சிலர்,தேவ கிருபையை விருதாவாக்கி, சுகபோகமாய் வாழ்வதை கண்டு குழப்பமடையாமல், அழுத்தும் பாரங்களையும் நெருக்கும் பாவங்களையும் உதறித் தள்ளிவிட்டு, தேவ கிருபையின் நோக்கத்தை அறிந்து, கர்த்தருக்கு உங்கள் வழியை ஒப்புக் கொடுங்கள். ஒப்புக் கொடுத்தபின் அவர்மேல் நம்பிக்கையாயிருங்கள். சோர்ந்து போகாமல் நன்மையை நடப்பியுங்கள். இந்தப் உலகிலே இன்னும் கொஞ்சக் காலம் தான்! கர்த்தருடைய வீட்டிலே நீடித்த நன்மையின் நாட்கள் நிச்சயமாக உண்டு.

**சங்கீதம் 23:6**

**என் ஜீவனுள்ள நாளெல்லாம் நன்மையும் கிருபையும் என்னைத் தொடரும்; நான் கர்த்தருடைய வீட்டிலே நீடித்த நாட்களாய் நிலைத்திருப்பேன்.**

**ஜெபம்**: நித்திய ஜீவனுக்கென்று என்னை அழைத்த தேவனே, நீர் எனக்கு தந்த பொறுப்புக்களை பொறுமையோடு நடப்பித்து முடிக்கும்படிக்கு எனக்கு உணர்வுள்ள இருதயத்தை தந்து வழிநடத்திச் செல்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# வார்த்தையிலும் செய்கையிலும்

**1 கொரிந்தியர் 4:16**

**ஆகையால், என்னைப் பின்பற்றுகிறவர்களாகுங்களென்று உங்களுக்குப் புத்திசொல்லு, றேன்.**

சில மனிதர்கள், காலை, மதிய, மாலை வந்தனைகளை பெயரவிலே கூறிக் கொள்வதை கவனித்திருப்பீர்கள். எடுத்துக்காட்டாக, ஒருவர் காலை வந்தனத்தை உங்களுக்கு கூறும் போது, நீங்கள் மறுஉத்தரவாக காலை வந்தனத்தை கூறும் முன்னதாக அந்த நபர் உங்களைவிட்டு கடந்து சென்று விடுவார். அதாவது, இன்றைய நாட்களிலே, பல இடங்களிலே வாழ்த்துதல்கள்கருத்திழந்து, பேச்சளவிலும், முகஸ்துதியுமாகவே இருக்கின்றதை காணக்கூடியதாக இருக்கின்றது. விசுவாசமார்க்கத்தார் மத்தியிலும், பிரியமானவர்களே என்ற சொல்லு, எவ்வளவு கருத்துள்ளதாக இருக்கின்றது என்பதை நீங்கள் சற்று சிந்தித்துப் பாருங்கள். ஒரு கூட்டதிலுள்ளவர்களை பார்த்து, பிரியமானவர்களே என்று வாழ்த்துதல் சொல்லும் போது, அந்தக் கூட்டத்திற்குள்ளே வாழ்த்துதல் சொல்பவருக்கு பிரிமற்றவர்களும் இருப்பார்கள். ஆனால், அப்போஸ்தலராகிய பவுலோ, பிலிப்பி சபையோருக்கு எழுதும் போது, தன்னுடைய வாழ்த்துதல், பெயரளவில் அல்ல என்பதை உறுதிப்படுத்தும்படி, தேவனை சாட்சியாக நிறுத்துகின்றார். ஏனெனில், இருதயங்களை ஆராய்ந்தறிகின்ற தேவன் சிந்தையை அறிந்திருக்கின்றார். மேலும், கொரிந்து சபையோருக்கு எழுதும் போது, “உங்களை வெட்கப்படுத்தும்படிக்கு நான் இவைகளை எழுதவில்லை, நீங்கள் எனக்குப் பிரியமான பிள்ளைகளென்று உங்களுக்குப் புத்தி சொல்லுகிறேன். கிறிஸ்துவுக்குள் பதினாயிரம் உபாத்தியாயர்கள் உங்களுக்கு இருந்தாலும், தகப்பன்மார் அநேகர் உங்களுக்கு இல்லையே் கிறிஸ்து இயேசுவுக்குள் சுவிசேஷத்தினால் நான் உங்களைப் பெற்றேன்.” என்று தகப்பன் ஸ்தானத்தையுடையவராக அவர்களுக்கு கடிந்து கொண்டு புத்தி சொல்கின்றார். கிறிஸ்துவின் நாளிலே யாரும் கறைதிறையற்றவர்களாக கர்த்தர் முன்னிலையிலே காணப்படவேண்டும் என்பதே அவருடைய செய்தியின் கருப்பொருளாக இருக்கின்றது. ஒரு தகப்பனுக்கு தன் பிள்ளை தவறிப் போவானோ என்ற பயம் இருக்கின்றது போல, சாத்தானாவன் விசுவாசிகளை வஞ்சித்துப் போடுவானோ என்று அவர்களை குறித்து கரிசனை யுள்ளவராக இருந்தார். அவ்வண்ணமாகவே, நாமும், வார்த்தையிலும், செய்கையிரும் உண்மையுள்ளவர்களாக இருக்க வேண்டும். அந்த வளர்ச்சியானது எங்களிலே பெருக வேண்டும். தேவ ஆவியானவர் தாமே சத்தியத்திலே வழி நடத்திச் செல்வாராக.

**ஜெபம்:** பரலோக தேவனே, நான் அசதியாயிராமல் ஜாக்கிரதையாயிருந்து, ஆவியிலே அனலாயிருந்து, உமக்கு ஊழியம் செய்யவும், சகோதர சிநேகத்திலே உண்மையாய் நிலைத்திருக்வும் எனக்கு கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# கவனமாய் நடந்துகொள்ளுங்கள்

அப்போஸ்தலராகிய பவுல் எழுதிய 13 நிரூபங்களிலே, ஏழு சபைகள் அடங்கியிருக்கின்றது. அவை யாவன: ரோமர், கொரிந்தியர், கலாத்தியர், எபேசியர், பிலிப்பியர், கொலோசேயர், மற்றும் தெசலோனிக்கேயர். ஒவ்வொரு சபைக்கும் எழுதும் போது, அவர்கள் வஞ்சிக்கப்பட்டு போகாதபடிக்கு எச்சரிப்பை கொடுத்திருக்கின்றார். இன்று சிலர் இவற்றிற்கு விரோதமாக பிரசங்கித்து, நீங்கள் ஒருமுறை மனந்திரும்பினால்போதும், அதன் பின்பு, மனந்திரும்புதலும் பாவ மன்னிப்பும் அவசியமில்லை என்று பிரசங்கிக்கின்றார்கள். இவர்களும் விசுவாசிகளை வஞ்சிக்க வகை தேடுகின்றவர்களாக இருக்கின்றார்கள். தேவ ஊழியராகிய பவுல், ஒவ்வொரு சபைகளுக்கும் கூறிய வசனங்களில் ஒன்றை இன்று பார்ப்போம். “இந்த பிரபஞ்சத்திற்கு ஒத்த வேஷம் தரிக்காமல்” “ஆகிலும், சர்ப்பமானது தன்னுடைய தந்திரத்தினாலே ஏவாளை வஞ்சித்ததுபோல, உங்கள் மனதும் கிறிஸ்துவைப்பற்றிய உண்மையினின்று விலகும்படி கெடுக்கப்படுமோவென்று பயந்திருக்கிறேன்.” “புத்தியில்லாத கலாத்தியரே, நீங்கள் சத்தியத்திற்குக் கீழ்ப்படியாமற்போகத்தக்கதாக உங்களை மயக்கினவன் யார்?” “நாட்கள் பொல்லாதவைகளானதால் காலத்தைப் பிரயோஜனப்படுத்திக்கொள்ளுங்கள்.” “நாய்களுக்கு எச்சரிக்கையாயிருங்கள், பொல்லாத வேலையாட்களுக்கு எச்சரிக்கையாயிருங்கள், சுன்னத்துக்காரருக்கு எச்சரிக்கையாயிருங்கள்.” “லௌகிக ஞானத்தினாலும், மாயமான தந்திரத்தினாலும், ஒருவனும் உங்களைக் கொள்ளைகொண்டு போகா தபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள்” “தேவன் நம்மை அசுத்தத்திற்கல்ல பரிசுத்தத்திற்கே அழைத்திருக்கிறார். ஆகையால் அசட்டைபண்ணு கிறவன் மனுஷரை அல்ல, தமது பரிசுத்த ஆவியை நமக்குத் தந்தருளின தேவனையே அசட்டைபண்ணுகிறான்.” இப்படியாக இன்றும் தங்கள் சுய ஆதயத்தை கருத்திற் கொண்டு, தங்கள் வயிற்றுகென்று மனிதர்களை ஆதயப்படுத்திக் கொள்ளும் கள்ளப் போதர்கள் தோன்றி யிருக்கின்றார்கள். வஞ்சத்தின் ஆவி அவர்கள் வழியாக கிரியை செய்து வருகின்றது. நீங்களோ, அந்த வஞ்சக வளைக்குள் அகப்படாதபடிக்கு, ஆவியிலே ஜெபம் பண்ணுங்கள். சத்திய வார்த்தைகளை தியானியு ங்கள். வஞ்சமான வார்த்தைகளை பகுத்தறி யும்படி, ஆவியானவருக்கு இடங்கொடுங்கள். அவர் உங்களை சகல சத்தியத்திலும் வழிநடத்திச் செல்வார்.

**எபேசியர் 5:17**

**ஆகையால், நீங்கள் மதியற்றவர்களாயிராமல், கர்த்தருடைய சித்தம் இன்னதென்று உணர்ந்துகொள்ளுங்கள்.**

**ஜெபம்:** உன்னதமான தேவனே, உமக்கு பிரியமானது இன்னதென்று நான் சோதித்தறிந்து, கனியற்ற அந்தகாரக் கிரியைகளுக்கு உடன்படாமல், அவைகளைக் கடிந்துகொண்டு, சத்தியத்திலே நடக்க எனக்கு கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# தேவ அன்பை அறியும் அறிவு...

இன்றைய உலகிலே அன்பே பிரதானம் என்பதைக் குறித்து பரவலாக மனிதர்கள் பேசிக் கொள்வார்கள். சில இடங்களிலே அன்பு சகல பாவங்களையும் மூடும் என்ற வார்த்தையை தவறாக புரிந்து கொண்ட சிலர், தேவ நீதி நிறைவேற இடக் கொடுக்காமல், அநியாயங்களையும் அக்கிரமங்களையும் மூடி மறைத்து விடுகின்றார்கள். எடுத்துக்காட்டாக, ஒரு விசுவாசியின் பிள்ளையான வன், சபைக்கு வரும் வேறு பிள் ளைகளுக்கு தீங்கான காரியத்தை செய்து விட்டான். அந்த விசுவா சியோ, தான் தன் பிள்ளையை அன்பு செய்கின்றபடியால், அந்த தீங்கை எப்படியாவது மூடி மறை த்து, தன் பிள்ளையை காப்பாற்றி, மற்றவர்களுடைய பிள்ளைகளுக்கு நீதி செய்யாமல் போய்விட்டால், அந்த அன்பைக் குறித்து நீங்கள் என்ன கூறுவீர்கள். “தமக்குமுன்பாக நாம் அன்பில் பரிசுத்தமுள்ளவர்களும் குற்றமில்லாதவர்களுமாயிரு ப்பதற்கு, அவர் உலகத்தோற்றத்துக்கு முன்னே கிறிஸ்துவுக்குள் நம் மைத் தெரிந்துகொண்டார்” பரிசுத்த வேதாகமத்திலே வாசிக்கின்றோம். பிலிப்பியர் முதலாம் அதிகாரம் ஒன்பதாம் வசனத்திலே மேலும், உத்தமமானவைகளை நீங்கள் ஒப்புக்கொள்ளத்தக்கதாக உங்கள் அன் பானது அறிவிலும் எல்லா உணர்விலும் இன்னும் அதிகமதிகமாய்ப் பெருகவேண்டும் என்று தேவ ஊழியராகிய பவுல் உதாரண குண முள்ள பிலிப்பி சபையிலுள்ளவர்களுக்கு எழுதியிருக்கின்றார். அதா வது, ஒரு விசுவாசியாவன், பிதாவாகிய தேவன் நம்மேல் கொண்ட அன்பை அறியும் அறிவிலே வளரும் போது, அவன் அன்பிலே வள ர்ந்து பெருகின்றான். அதுமட்டுமல்லமால், தேவ அன்பின் அறிவிலும் எல்லா உணர்விலும் பெருகும் போது, எப்படி பிதாவாகிய தேவன் மற் றவர்களை அன்பு செய்கின்றாரோ, அந்த பிரகாரமாக நாமும் மற்ற வர்களை அன்பு செய்ய ஆரம்பிப்போம். தேவ அன்பின் பண்பை அறி ந்து கொள்ள வேண்டும். இந்த உலகிலே மனிதர்கள் கூறும் அன்பு, அவரவரைப் பற்றியதாக இருக்கும். அதற்குள்ள சுயம் காணப்படும். ஆனால், தேவ அன்போ தனக்கானவைகளை சிந்தியாமல், பிறருக்கான வைகளையும் சிந்திக்க தூண்டும். இந்த தன்னலமற்ற அன்பைக் குறித்து, இன்னும் அதிகமாக நாம் பிலிப்பியர் 2ம் அதிகாரத்தை தியா னிக்கும் போது பார்க்கலாம். நீங்கள், தேவ அன்பை அறியும் அறிவிலே வளருங்கள். தேவனைப் போல மற்றவர்களை அன்பு செய்ய கற்றுக் கொள்ளுங்கள்.

**எபேசியர் 1:4**

தமக்குமுன்பாக நாம் அன்பில் பரிசுத்தமுள்ளவர்களும் குற் றமில்லாதவர்களுமாயிருப்ப தற்கு,

**ஜெபம்:** அன்பில் என்னை பரிசுத்தனாக்க சித்தம் கொண்ட என் தேவனே, என் அன்பானது அறிவிலும் எல்லா உணர்விலும் இன்னும் அதிகமாக பெருகும்படி எனக்கு ஞானமுள்ள இருயத்தை தந்து வழிநடத்திச் செல்வீ ராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# நன்மையைப் பற்றிக்கொண்டிருங்கள்

பிதவாகிய தேவன்தாமே நம்மேல் பாராட்டின அன்பு நாம் அடைந்து இரட்சிப்புக்கு அடிதளமாக இருக்கின்றது. அந்த அன்பானது பாவங்களை, நாம் நம்முடைய பாவங்களை மூடி மறைக்க வேண்டும் என்று கூறவில்லை. மாறாக, நம்முடைய பாவங்களை நாம் அறிக்கையிட்டால், பாவங்களை நமக்கு மன்னித்து எல்லா அநியாயத்தையும் நீக்கி நம்மைச்சுத்திகரிப்பதற்கு அவர் உண்மையும் நீதியும் உள்ளவராயிருக்கிறார். ஆனால், இன்று, வேத வார்த்தைகளுக்கு விரோதமாக வாழ்ந்து கொண்டிருப்பவர்களில் சிலர், தங்கள் பாவ இச்சைகளிலே விட்டுவிட மனதில்லாமல் இருப்பதால், தங்கள் வழிகளை குறித்து மற்றவர்கள் ஏதும் கூறுவதற்கு முன்னதாகவே, அன்பு இருந்தால் போதும் என்று கூறிக் கொள்வார்கள். "உங்கள் அன்பு மாயமற்றதாயிருப்பதாக. தீமையை வெறுத்து, நன்மையைப் பற்றிக்கொண்டிருங்கள்." என்று ரோமர் 12ம் அதிகாரம் 9ம் வசனத்திலே வாசிக்கின்றோம். தீமையானது பிசாசானவனிடத்திலிருந்து வருகின்றது. நன்மையோ தேவனிடத்திலிருந்து வருகின்றது. விசுவாசிகள் தேவ அன்பை அறியும் அறிவிலும் உணர்விலும் வளரும் போது, அவர்கள் வாழ்விலே மாற்றங்கள் ஏற்படும். தானதர்மங்கள் நல்லது அதைவிட மேலானவைகளும் உண்டு. கிறிஸ்துவிலிருந்த சிந்தையாகிய மனத்தாழ்மையும், கீழ்படிவும் உண்டாக வேண்டும். அவை நீதியின் கனிகளால் வெளிப்படுத்தப்பட வேண்டும். தேவ வார்த்தைக்கு கீழ்படிகின்றதை எப்படி கனிகளால் உறுதிப்படுத்த முடியும். தேவன் நியமித்த அதிகாரங்களுக்கு கீழ்படிகின்றவர்கள், தேவ வார்த்தைக்கு உண்மையாக கீழ்படிகின்றவர்களாக இருப்பார்கள். இன்று அதிக தொலைவிலே இருப்பவர்களுக்கு தானதர்மங்களை செய்கின்றவர்கள் சிலர், தங்கள் அருகில் இருக்கும் உடன் சகோதரரோடு பகை, வைராக்கியம், பிரிவினை, கசப்பு போன்றவற்றை காண்பிக்கின்றாக்கள். மன்னிக்கும் மனப்பான்மையிலே பெருகின்றவர்களாக இருப்பார்கள். இப்படியாக, உள்ளான மனிதனிலே வரும் மாற்றங்கள், வெளியரங்கமான கனிகளை அவர்களுக்கு வாழ்க்கையிலே வெளிப்படுத்தும். பிதாவாகிய தேவன் தம்மிடத்தில் வேண்டிக்கொள்பவர்களுக்கு நன்மையான ஈவுகளை கொடுப்பது அதிக நிச்சயம். எனவே அவரை நோக்கிப் பாருங்கள். நன்மையானவைகளை அவர் உங்களுக்கு தந்தருள்வார்.

**மத்தேயு 7:11**

**பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதா தம்மிடத்தில் வேண்டிக் கொள்ளுகிறவர்களுக்கு நன்மையானவைகளைக் கொடுப்பது அதிக நிச்சயம் அல்லவா?**

**ஜெபம்**: அன்பின் பரலோக பிதாவே, என்னுடைய அன்பு மாயமற்றதாக இருக்கவும், அது கனிகளால் என்னில் வெளிப்படவும் எனக்கு உணர்வுள்ள இருதயத்தை தந்து வழிநடத்திச் செல்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக் கிறேன் ஆமென்.